தனிப்பிரதி 1 அணா வருட சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு. ஆசிரியர் C. N. அண்ணாதுரை M. A.,

"தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்!—இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. ‖ காஞ்சிபுரம் 19—4—42 சித்திரபானு—சித்திரை 7உ ஞாயிறு ‖ இதழ் 7

தீட்சிதர் வீட்டில்.....!

பரதன்.

தீட்சிதர் வீட்டிலே ஆதித் திராவிடருக்குக் கலியாணம்!

"நிசமாகவா? எங்கே? எப்பொழுது நடந்தது?" என்று என்னைக்கேட்காதீர்கள். தோழர்களே! எனக்குத் தீட்சிதர்வீட்டு வைபவம் எதுவும் தெரியாது. சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை. விரும்பினதுமில்லை. பலப்பல கேள்விப்பட்டிருக்கிறேன். நெற்றியில் விபூதி விளங்க மார்பிலே நூலாட, மனதிலே மமதையாட, தீட்சிதத் திருக்கூட்டம் தெருவில் நடக்கக் கண்டிருக்கிறேன். மேனியின் பளபளப்பு, வாழ்க்கையில் உள்ள சுகத்தைச் சித்தரிப்பதைக் கண்டிருக்கிறேன். முல்லை முறுவலும் திருவிழித்திருகலும், கொண்ட தீட்சிதத்திருமதிகளைக் கண்டுள்ளேன். அவர்களின் ஆடை அணி அலங்காராதிகள், கண்காட்சியாக இருக்கக் கண்டிருக்கிறேன். வேறொன்று மறியேன் பராபரமே! தீட்சிதர் வீட்டுக்குள் உமாநாதர் இடபாரூடராக வருகிறாரோ, மயில்மீதேறி மால்மருகன் வருகிறாரோ, மாரிஸ் மைனர் மோடாரில் மருகர் வருகிறாரோ, யாதோ அறிகிலேன். ஆனால் அவர்கள் நிம்மதியான வாழ்க்கையை நடத்திக்கொண்டு நேத்திரானந்த ரூபர்களாக இருக்கக்கண்டுள்ளேன். யாரின் கடைக்கண் கடாட்சமோ யாரறிவார்!

அவை தவிர, வேறு வைபவம் என்ன ஆங்குளதென்பதை நானறியேன். ஆகவே தீட்சிதர் வீட்டிலே ஆதித்திராவிடருக்குக் கலியாணம் என்று நான்சொன்னதும் எங்கே நடந்ததென்று என்னைக் கேட்காதீர்கள். அது என் வாசகமல்ல!

தோழர் S. V. லிங்கம் தெரியும் உங்களுக்கு, காலமும் கட்சிப் பணியாற்றியதால் உண்டான கஷ்டமும் சேர்ந்து கரியநிறத்தையும், கவலை உள்ளத்தையும் காலில் சக்கரத்தையும், தரப்பெற்று, தமிழகத்தில் மாநாடு, விழா நாள் அறிக்கை வெளியிடுதல் முதலியவற்றைச் செய்வதிலே தனிருசியுடன் விளங்கும் தோழர், அவர் சொன்னார் தீட்சிதர் வீட்டிலே ஆதித்திராவிடருக்குக்கலியாணம் என்று!

தோழர் லிங்கம் பேச்சு அலாதியானது! சரளமான ஹாஸ்யம், சமயத்திலே வீரம், சுருக்கென்று தைக்கும் சொல்லம்பு, இவற்றுடன், அபூர்வமான வியாக்யானங்களைச் சிலசமயம் கூறுவார் தோழர் லிங்கம். அவருடைய ஹாஸ்யம், சிரிப்பை மூட்டவேண்டுமென்பதற்காகச் சிலர் சொற்றொடர்களை வைத்தடுக்கிக் காட்டுகிறார்களே, அது போன்றதல்ல! திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தைக்கூறி, அதிலே உள்ள ஹாஸ்யத்தைப் பொதுமக்கள் கண்டுகொள்ளவில்லையே என்று கவலைப்படும் பேச்சல்ல. சிரிக்கவைக்கவேண்டும் என்பதற்காகவே, சிரமப்பட்டு சில்கூற முற்படுபவரல்ல லிங்கம். சகசமாக, இயற்கையாக வரும் அந்த ஹாஸ்யம், சினிமாவிலே தோழர் N. S. கிருஷ்ணன் எங்ஙனம் ஹாஸ்யத்தை அரியமுறையில் வெளிப்படுத்தக் காண்கிறோமோ, அதுபோல் தோழர் லிங்கம், அவரது பேச்சின் ருசி வரவரக் குறைகிறதோ என்று அஞ்சவேண்டி வருகிறது. அதற்குக்காரணம் அவரல்லவே, இயக்கம் அவரைச் சரியாகப் பயன்படுத்தாதது தானே என்பதை எண்ணும்போது வருத்தமும் பிறக்கிறது. நமக்கோ, அஞ்சவும் வருந்தவும் முடிகிறதே தவிர, ஆறுதல் கூறவோ, குறைகளையவோ, சக்தியில்லை. மனம் இருக்கிறது மார்க்கம் இல்லை!

சிதம்பரத்தில் 11, 12ந்தேதிகளில் ஜஸ்டிஸ் சுயமரியாதை மாநாடுகள் மிக விமரிசையாக நடைபெற்றன. வந்தனங்கூற வந்தார் லிங்கம். மாநாட்டின் அருமைபெருமைகளைச் சீர்சிறப்புகளை, முக்கியத்துவத்தை விளக்க அவர் முக்கால்மணி பேச முற்படவில்லை, மூதுரை, சிறுகதை ஓதவில்லை. நாலே வார்த்தையில் நகைச்சுவையும் பொருட்சுவையும், அடைத்து விட்டார், மாநாட்டிலே.

சிதம்பரத்திலே, ஜஸ்டிஸ் சுயமரியாதை மாநாடு நடப்பதென்றால், அது தீட்சிதர் வீட்டிலே ஆதித்திராவிடருக்குக் கலியாணம் நடப்பது போன்றது என்றார். ஆனந்தந்தரும் ஹாஸ்யமும் அழகிய கருத்தும் அந்த ஒரு டசன் பதங்களிலே எவ்வளவு ரமணீயமாகப் பொதிந்துள்ளன பாருங்கள்! ஐந்தாறு நிமிடங்களாயின கரகோஷம் அடங்க!!

இத்தகைய முடிவுரையின், முன்னுரை, இலேசானதல்ல!

இரண்டாண்டுகளுக்கு முன்பு, வடார்க்காட்டிலே வடசேரியிலே, வாலிபவீரர் தோழர் சபாரத்தினம்

நடாத்திய ஜஸ்டிஸ் மாநாட்டிலே தலைமை வகித்துவிட்டுப்பிறகு, வெளிக்கிளம்பாமல் இருந்துவந்த தோழர் **W. P. A.** சௌந்தரபாண்டியன் அவர்களின் தலைமையிலே ஜஸ்டிஸ் மாநாடு நடைபெற்றது, என்றால் அதிலும் சர். கிரிப்சிடம் பேசிவிட்டு வந்த நமது இயக்கத்தூதுக் கோஷ்டியில் ஒருவரான பாண்டியனாரின் தலைமையில், வைதீகக் கோட்டையிலே மேற்படி மாநாடு நடப்பதென்றால், இலேசான காரியமென்றுகூற முடியுமா!

தில்லை மூவாயிரவர் தலத்திலே திராவிடர் ஐயாயிரவருக்கு மேலாகவே கூடி, ஆரியவேத மோதிடும் வீதிகளிலே தமிழ் வீரமுழக்கம் செய்துகொண்டு, நடராசர் நடனமாடும் பதியிலே நாட்டுத் தலைவர்கள் பாட்டு மொழியிலே பரணியுரைத்தனரெனில் அஃது இலேசானதாகுமா!

சிதம்பரம் மாநாடுகூடும் அத்தினம் காலைவரையிலே, காங்கிரஸ் உலகமே களிப்பெனும் கடலிலே மூழ்கிக்கிடந்தது. பிற்பகலில்தான், அக்கடலிலே செய்திச்சுறா கிளம்பி, அவர்களைச் சிதைத்தது. பத்திரிகைகளிலே முழுபக்க முந்திரிக்கொட்டை எழுத்தலங்காரங்களென்ன, முறுவலும் கண்சிமிட்டலுமென்ன, முகமனும் முரசுமெவ்வளவு, அடடா, ஆனந்தத்தாண்டவமாடினர் காங்கிரசார். "மானாட, மழுவாட, மங்கை சிவகாமியாட" என்று பாடுவார்களே அதுபோல், டில்லி நிருபர்கூற, மித்திரன் இந்து எடுத்தோத, அக்கிரகாரம் ஒலிபரப்ப, அடியார்கூட்டம் தமுக்கடிக்க, "அற்புதமான சுயராச்யம் வந்துவிட்டது. கிரிப்ஸ், நாம் கோரிய வரத்தைக்கொடுத்தேவிட்டார்" என்று மங்களம் பாடினார் காங்கிரசார். "ஜவஹர் ராணுவமந்திரி! ஆச்சாரியார் அடுத்தமந்திரி! மாகாணங்களிலே மந்திரிசபைகள்! இனிஆட்சி காங்கிரசாரிடந்தான்!" என்று கூறினர், ஆடினர். "இனிமேல் லீகும் ஜஸ்டிசும் என்னசெய்யும் என்று இரங்கினவர்போல் கேட்டனர். தலையங்கங்கள் கூட வெளிவந்துவிட்டன.

"இந்தா! விபீஷணா இலங்காபுரி ராச்யம், இந்தா, இந்தா, இந்தா!" என்று கிரிப்ஸ்துரை, காங்கிரசாரிடம் பாடி, முடிசூட்டிவிட்டார் என்று முற்றுமுணர்ந்தவரெனக் கூறிடும் முத்தண்ணாக்கள் மோகனம் பாடினர். இந்நிலையில், சிதம்பரம் ஜஸ்டிஸ் மாநாடு ஆரம்பமாயிற்று.

"இதுகளுக்கு மாநாடு ஒருகேடாக்கும். கிரிப்ஸ், சுயராச்யம் கொடுத்தானபிறகு இதுகள் கூச்சலிட்டு வரளுவானேன்" என்று அக்கிரகாரம் கேலிசெய்தது. எல்லாம் எதுவரையில்? பிற்பகல் 2-மணிவரை! 2மணிக்கு வந்தது இழவோலை, அமங்கலகீதம், ஒப்பாரி! கிரிப்ஸ்திட்டம் கைகூடவில்லை. துரைகப்பலேற வேண்டியதுதான் பாக்கி, என்று ரேடியோ தெரிவித்தது. மோகனம் முகாரியாகி, ஆனந்தபாஷ்பம் கண்ணீராகி, காங்கிரஸ்காரர் களிப்பை இழந்து, தலைகவிழ்ந்து, எதிரேவரும் ஜஸ்டிஸ்காரரைக்காணவெட்கி, வீடுசென்று விசாரத்துடன்வீழ்ந்துவிட்டனர். ஜவஹர், ஆச்சாரியார் ஆகியோருக்கு ராணுவ உடை போட்டு, இவர்கள் மனதிலே சித்தரித்த உருவங்கள் அழிக்கப்பட்டுப் போய்விட்டன. சிரித்த முகத்தோடு வெளிவந்துகொண்டிருந்த கிரிப்சின் படங்கள், சிந்தனையில் ஈடுபட்ட முகமுடைய போட்டோவாகமாறி வெளிவந்துவிட்டன.

"சுற்றிவந்த சித்தப்பா! சோறிருந்தால் கொடு அப்பா" என்றானாம் ஒருஆண்டி, மற்றோர் ஆண்டியைப்பார்த்து. வந்த ஆண்டி சொன்னானாம், "சுற்றிவந்தேன்முத்தப்பா சூனியங்கண்டேன், போடாப்பா" என்று சோகித்துக் கூறினானாம், அந்தஆண்டி. "உலகம் கெட்டே போச்சப்பா! உறங்குவதேமேல் நடந்திடப்பா" என்றிருவரும் கூறிக்கொண்டு, சாவடி சென்றனராம். அதுபோல, காங்கிரஸ்தலைவர்கள், கிரிப்சின் பங்களாவை, வலமாகவும் இடமாகவும்சுற்றி, வாழ்த்தி வரங்கேட்பதுகண்ட வாலர்கள், இனிஅடிக்கும்பிரைஸ் என்று எண்ணிப் பூரித்தனர், கிரிப்ஸ் தந்ததிலே தமக்கென்ன கிடைக்குமெனக்கேட்க, ஆவலுடன் இருக்கும் வேளையில், வெறுங்கையுடனும் விம்மலுடனும், வீடுவந்து சேர்ந்து விட்டனர் காங்கிரஸ் தலைவர்கள். அந்த ஆண்டியின் கதைபோலாயிற்று அவர்கள்விஷயம். சேச்சே! இந்தப்பிரிட்டிஷார் ரொம்ப கெட்டவர்கள்! ஏன் இப்படி ஆசையைக் கிளப்ப வேண்டும், பிறகேன், அவர்களின்மனமுடையச்செய்ய வேண்டும். பரிதாபமாக இல்லையா! அதிலும் இந்த சர். கிரிப்ஸ், இளையாளிடம் கொஞ்சும் நரைத்தலையன்போல் காங்கிரசாரிடம் கொஞ்சினான். அவர் 'நமது சொக்குப்பொடியில்' சிக்கிவிட்டார் என்று காங்கிரசார் நம்பிவிட்டனர். கடைசி நேரத்தில், கைவிட்டாரே அவர். இது எவ்வளவு பரிதாபம் பாருங்கள்!

எம்பிரான்கள் ஏமாந்தது இரண்டு மணிக்கு. நாம் கூடியதோ காலையிலே. அந் ; நேரம், "வருகிறது வரிசை, வாரி முடித்துக்கொள் சடையை" என்று காங்கரசார் நமது மனமெனும் மங்கைக்குக் கூறிக்கொண்டிருந்த சமயம். இரண்டுமணி நேர ஊர்வலம், தலைவர் பாண்டியனின் சட்டையை ஈரமாக்கிவிட்டது. மேலேஇருந்த சாயம்போன சாயத்துணியை இழுத்துப் போர்த்துக்கொண்டு, பாண்டியனார், "கிரிப்சிடம் சென்றதில் நமக்கொன்றும் அனுகூலமேற்படவில்லை" என்று தமது தலைமையுரையிலே கூறிவிட்டார். ஆனந்தம் அங்கே! விசனம் இங்கே!! வெற்றி, நூலணிவோர்க்கு! வீழ்ச்சி நம்மவருக்கு!! என்று மாநாட்டில் கூடிய நமது தோழர்கள் எண்ணிக்கொண்டனர். இத்தகைய சுற்றுச்சார்பு, மாநாட்டின் சோபிதத்தையோ சுறுசுறுப்பையோ கெடுக்கவில்லை. வெளி ஜில்லாக்களிலிருந்தும் பல தோழர்கள் வந்திருந்தனர். சோர்வடைய ஒட்டாதபடி, இனிய கீதங்கள் கிளம்பின. மாநாட்டைத்திறக்க வரவேண்டிய **பெரியார்** வரத்தாமதமாகவே, வாலிபத்தோழர், இஸ்லாமிய ஏறு தோழர் திருப்பூர் மொய்தீன், மாநாட்டைத் திறந்து வைத்தார். ஆதிலட்சுமி அம்மையார் கொடி ஏற்றுவித்து, குனிந்த உள்ளத்தையும் நிமிரச்செய்தார்! பாண்டியனார், தமது தலைமையுரையில் பலகூறினார், பரணியே அது!

பெரியாரும் வந்துவிட்டார். வேகமாக நுழைந்தார் கொட்டகையில், தாகத்தோடிருந்த தோழர்களுக்குச் சொற்பொழிவுச் சாற்றைத்தந்தார். பருகினர், பூரித்தனர்.

"எதுவந்தாலென்ன! எதுபோனாலென்ன!
மெய்க்காதல் ஒன்றிருக்கும்போது"

என்றுஓர்பாடல் உண்டு, சினிமாவில். அதுபோல், "கிரிப்ஸ்எதைத்தந்தாலென்ன, தாராமற்போனாலென்ன, தடிதாங்கிய தலைவர் இருக்கும்போதுநமக்கென்னகுறை" என்று தோழர்கள் எண்ணி மகிழ்ந்து, கைதட்டிக் களித்து, காவல்புரிவோம் திராவிடக்கோட்டையை என்று உறுதி உரைத்திருந்தனர்.

கிரிப்சால் பயன் ஏற்படவில்லை! காங்கிரசார் கோரியது அவர்களுக்குக் கிடைத்துவிட்டது, என்ற நிலையிலும், நம்மவர் நெஞ்சில் இவ்வளவு ஆர்வம் இருக்கிறதென்றால், வெற்றியுங்கண்டால், எங்ஙனமிருக்கும் அவர் தம் உணர்ச்சி என்பதை எண்ணிப்பார்த்தல் வேண்டும். "எதிர்கால வாழ்க்கையை இன்னொருவர் சித்தரிப்பானேன், நாமிருக்கையில், பயமேன்!" என்று உள்ளத்தில் திடங்கொண்ட, தோள்வலிமைத் தோழர்களை நமது இயக்கம் பெற்றிருக்கிறது.

"1000-மைல்களுக்கு அப்பால், டில்லி நகரிலே, ஆரியர்கள், தமது இயல்பை, குரோதத்தை, விஷமத்

(8ம் பக்கம் பார்க்க)

ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்

[வீனஸ்.]

காமவெறியன் காலிகூலா!

அரண்மனையிலே அரசன் கொல்லப்பட்டுக் கிடந்தான்! நகரெங்கும் குதூகலமும், கொண்டாட்டமுமாக இருந்தது!! "பேராசை ஆண்டவரே! பிரியபதி! உம்மை விட்டுநான் எங்ஙனம்பிரிவேன்" என்று அரசி, அழுது புரண்டாள். "அப்பா! அப்பா!" என்றுஅலறினாள் பெண்.

ஹூபஸ் என்ற சதிகாரன் சிரித்த முகத்தோடு காட்சியைக் கண்டான். உருவிய உடைவாளோடு நின்றான்.

"உயிருக்குயிரான அவர்போய் நானிருக்கவேண்டுமோ! உன்னை வேண்டுகிறேன், என்னைக் கொன்றுவிடு" என்று அரசி கெஞ்சினாள்.

"அதுவேமுறை" என்றான் அவன். கூரியவாள் அவளது இருதயத்தைத் துளைத்தது, கூந்தல், இரத்தத்தில் தோய்ந்தது. சாய்ந்தாள் அரசி.

அரசிளங்குமரியை, ஹூபஸ் பிடித்திழுத்து, சுவற்றில் வீசினான். தலை சுக்கு நூறாயிற்று. சுடலைவாசியானான் அவளும். அரச குடும்பத்தின் இந்த முடிவு கேட்டு, மக்கள் மகிழ்ந்து, 'தொலைந்ததுபீடை' என்று கூறினர்.

கட்டுக் கதையல்ல! ரோம் சாம்ராச்ய சரிதம்!

காலி கூலா, என்ற அரசனும், அவனது மனைவி சீசோனியாவும், மகளும், கொல்லப்பட்ட சம்பவமே, மேலே தீட்டப்பட்டிருப்பது. மன்னன் மாண்டது கேட்டு மக்கள் மகிழ்ந்ததன் காரணம், மன்னன், உயிருடன் இருந்தபோது செய்த கொடுமையே யாகும். அத்தகைய **காலிகூலா** எனும் ரோம் சாம்ராச்ய சக்ரவர்த்தியின் காமவெறியைக் கூறுவோம் இனி.

காலிகூலா, டைபிரியஸ் எனும் பேரரசனின் பேரன்! டைபீரியஸ், அக்கிரமமாக ஆட்சி செலுத்திமாண்ட பிறகு, காலிகூலாவுக்குக் கிரீடம்கிடைத்தது. பட்டத்துக்கு வந்ததும், அடக்கமும் அன்பும், புத்தியும் கொண்டவன்போல், காலிகூலா நடந்துகொண்டான். மக்கள், டைபீரியஸ் காலத்திலே பட்டகஷ்டத்தைக்கூட மறந்து, இனியேனும் நிம்மதியேற்படுமென்றெண்ணினர். ஆனால் முகமூடி கீழேவீழ்ந்துவிட்டது. கபடத்தைக் களைந்துவிட்டு, காலிகூலா, தனது காட்டுமிராண்டித்தனமான காரியத்தை நடாத்தலானான். கொடுங்கோலாட்சியின் விளைவாக, மக்கள் கண்ணீருங் கம்பலையுமாக இருந்தனர். காலிகூலாவின் காமவெறியாட்டங்களோ, கேட்கவும்கர்ணகடூரமானவை. பெருங்குடி, அந்தஸ்த்து, உறவு, முதலிய எத்தகைய வேலியிடப்பட்டிருப்பினும் அழித்துவிட்டு, பெண்களைச் சூறையாடுவதிலே பெருமை பாராட்டிக்கொண்டவன் காலிகூலா! அவனது காமச்சேட்டைக்குப் பலியாகாத பிரபல குடும்பங்கள் மிகச்சிலவேயாகும். மனிதத்தன்மையையும் மறந்து, மாதரிடம் மதிமயங்கிக் கிடந்தான். கேட்பவர் மனதைத்துடிக்கச்செய்யும் கேடுகள் செய்தவன், இம்மன்னன். தனது சகோதரியையே, கணவனை விட்டுப்பிரித்து, பெண்டாளத் துணிந்த பேயன்! இதனை மறைக்காது, பலரறியப்பேசியவன்! அத்தகைய காலிகூலாவின் மரணத்தைக்கேட்டமக்கள் மகிழ்ச்சியடைந்ததிலே ஆச்சரியமேது!

காலிகூலா, மூன்று நங்கையரை மணம்செய்துகொண்டான். முதலிருவரை, சின்னாட்கள் சீமாட்டியாக வைத்திருந்துவிட்டு, துரத்திவிட்டான். கடைசி மனைவியிடமே, கட்டுண்டு கிடந்தான்.

முதல் திருமணம், மிக விசித்திரம், விபரீதம்!

மேளங்கள் முழங்கின! சீமான்களும் சீமாட்டிகளும் ஆடை அணி அணிந்து சிரித்துக்கொண்டு மணவினை காணச்சென்றனர். ஆடல் ஒருபுறம்! பாடல் மற்றோர்புறம்! கேளிக்கையும் களியாட்டமும் வேறோர்புறம்! மகரதோரணங்கள், வரவேற்பு வளைவுகள், வாண வேடிக்கைகள், வரிசைகள், முதலிய வசீகரக் காட்சிகளுடன், திருமணம் தொடங்கிற்று! காலிகூலாவுக்கல்ல!! கால்பூர்னியஸ் **பிசோ** என்ற சீமானுக்கும், **ஓரேஸ்ட்டில்லா** என்ற சிங்காரிக்கும்! அந்தப் பிரபல திருமணத்தைக்காண ரோம் சாம்ராச்ய ரதகஜதுரக பதாதிகளின் காவலர்களும், பிரதானியரும் வந்தனர். மாப்பிள்ளை, மன்னனை வேண்டி, தனது மணவினைக்கு வந்து, தன்னைக் கௌரவிக்கும்படி கேட்டுக்கொண்டான். மன்னனும் இசைந்தான், மணம்நடக்கும் மாளிகை புகுந்தான். மணப்பெண், பணிபூண்டு, பட்டுடை உடுத்தி, பரிமளம்பூசி, கண்களைப்பறிக்கும் வனப்புடன் இருப்பதைக்கண்டான், அவள் மீது காமுற்றான்! அவ்வளவுதான், மணக்கோலமாது, மன்னனின் கட்டளைப்படி அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்! மாப்பிள்ளைக் கோலத்திலிருந்த **பிசோ** எனும் சீமான், மலரைமந்தியிடம் சிக்கவைத்தோமே என்று சிந்தை குழம்பிக்கிடந்தான். விருந்துண்ண வந்தவர்கள், நோயுற்ற உளத்தினராயினர்! வாத்தியங்கள் ஒலித்தன! மணம்நடக்கவில்லை!! அரண்மனையிலே, அரசன், ஓரேஸ்டில்லாவை கட்டிலறைக்குள் நுழையக் கட்டளையிட்டான். அவள் அதனை மறுக்கவில்லை. "அவளை நான் மணம்செய்து கொண்டேன்" என்று பிறகு மன்னன் அறிவித்தான், மக்கள், கோல்கொண்டவனிடம் குரங்கென இருந்தனர், எனவே, "சரி!" என்றுரைத்தனர். காலிகூலாவின் குணாதிசயத்தைக் கண்டிக்கப் பயந்தனர். பழிக்கஞ்சாப் பாதகனாகிய காலிகூலாவின் கோபத்திற்காளானால், சித்திரவதை நடக்குமென்பது மக்களுக்குத்தெரியும். கலியாணப் பந்தலில் நுழைந்தவளைக் கைபிடித்திழுத்து வந்து காதலியாக்கிக்கொண்ட காதகன், கடைசிவரை அவளைக் காப்பாற்றவுமில்லை. ஆசை அறுபது நாள் என்பார்களே அதுபோல் காமவெறி அடங்கச் சிறிது காலம் பிடித்தது. பிறகோ, கன்னி கசப்பானாள்! விவாகத்தை ரத்து செய்துவிட்டான். ஓரெஸ்டில்லாவை விலக்கிவிட்டான். அக்ரமம் அத்துடன் முடிந்ததா? இல்லை. அவள், மீண்டும் **பிசோ** சீமானைக் கலியாணம் செய்துகொள்ளக் கூடாதெனக் கருதி, அவளையும், பிசோவையும் நாடு கடத்தி, இருவரையும் வெவ்வேறு தீவுகளில் சிறையிலிட்டு வாட்டினான்.

முதல் கலியாணத்தின் அழகுஇது. பிறகு, பேயாட்டமாடிக் கொண்டிருக்கையில் ஓர்நாள் பிரதானியர், காலிகூலாவிடம், முன்னர் ரோம் சாம்ராச்ய சல்லாபிகளின் ஜொலிப்புபற்றிக் கூறிக்கொண்டிருக்கையில், "லோலியா என்றோர் சீமாட்டி இருந்தாள். அவள் அழகை என்னென்று வர்ணிப்பது. வான் மதியே வனிதையாக வந்ததோ என்று கூறும்வகையான வனப்புள்ளவள்" என்றனர். (10ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை

குமஸ்தாவின் பெண்தான்!

அல்லது

கொலைகாரியின் குறிப்புகள்.

சௌமியன்

[முன்பு கள்ளப்புருடனைக்கொன்று, தூக்குத்தண்டனைபெற்ற காந்தாவின் வாழ்க்கை வரலாற்றுக்குறிப்பு வெளியிடப்படுகிறது. அதிலே அவளுடைய ஆரம்பக்காதல் விஷயமாக விவரம் கிடைக்கிறது. அவள் சோமு என்ற வாலிபனைக் காதலிக்கிறாள்! அவனோ வேதாந்தத்தை விரும்புகிறான். பிறகு நடப்பது இனி கூறப்படுவது!]

திகிலோடு கலந்த காதல் என்னை மேலும் அதிகமாக வதைக்கத் தொடங்கிற்று. எங்கள் குடும்பக் கஷ்டமோ அதிகரித்துக் கொண்டே வந்தது. வீட்டின்மேல் வாங்கியிருந்த கடனுககு வட்டி கட்டத்தவறிவிட்டார் அப்பா. அவர் என்ன செய்வார்? இல்லாத குறைதான். வட்டியைச் செலுத்தும்படி நிர்ப்பந்தம் உண்டாகவே, 'அண்டிமாண்டு. எழுதிக்கொடுத்து வேறோரிடத்தில் கடன்வாங்கி, வட்டியைக் கட்டினார். இந்தக்கஷ்டத்திலே, ஒரு இளைப்பு இளைத்தே போனார். எவ்வளவு அலைச்சல், எவ்வளவு உழைப்பு, என்னசெய்வார். மிராசுதாரரிடம் அவர் ஓர் கணக்குப்பிள்ளை, ஆயிரம் இரண்டாயிரம் என்று கணக்கெழுதுகிறார், கிடைப்பது, குடும்பத்துக்குப் போதாது. தேள் கொட்டிவிட்டால் விஷம் ஏறுவதுபோல் வறுமை மேலே மேலே வளர்ந்துகொண்டே வந்தது. எனது வயதும் வளர்ந்தது. ஊரார், ஏன் இன்னமும் காந்தாவுக்குக் கலியாணமாகவில்லை என்று கேட்கும் கேள்வியும் வளர்ந்தது. அப்பா அம்மாவின் விசாரமோ சொல்லமுடியாது. இந்தநிலையில் தம்பி இராகவன், சொல்லாமற் கொள்ளாமல், ஊரைவிட்டே போய்விட்டான், எங்கே போனானோ, என்ன நேரிட்டதோ வென்று நாங்கள் நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டிருந்தோம்; ஒரு மாதத்திற்குப் பிறகு, இராகவனிடமிருந்து கடிதம் வந்தது. மேல் விலாசம் இராகவன் கையெழுத்தாக இருந்ததால் மகிழ்ந்தேன். கடிதம் என்பெயருக்குத்தான் வந்தது. வீட்டிலும் சந்தோஷப்பட்டார்கள். ஆனால், உள்ளே இருந்த செய்தி, எங்களுக்குச் சர்ப்பந் தீண்டியதுபோல் இருந்தது.

சாந்தாவுக்கு, N.P. நான் சொல்லாமல் ஓடிவந்துவிட்டேன் என்று கவலைப்படுவீர்கள் என்பது எனக்குத்தெரியும். முதுகுவலிக்க மூட்டை சுமப்பவனுக்குப் பாரம் குறைந்தால் நல்லதுதானே. வறுமையிலே வதையும் நமது குடும்பத்தில் நான் இப்போது இல்லாதிருப்பது ஓரளவு பாரம் குறைந்ததாகவே நான் கருதுகிறேன். இங்கு நான் வந்ததற்குக் காரணம், வேலை ஏதாகிலும் கிடைக்கும் என்பதற்காக மட்டுமல்ல; அங்குள்ள தரித்திரத்தின் கோரத்தைக்காணச் சகியாது வந்துவிட்டேன் என்று சொல்லுவதும் போதாது. சோமுவின் நடத்தையினாலேயே நான் இப்படி வந்துவிட நேரிட்டது.

காந்தா, நீ சோமுவைக்காதலிக்கும் விஷயம் எனக்குத்தெரியும். கண்ணில்லையா எனக்கு, கருத்து இல்லையா! சோமு நல்லவன் ஆனால் அவனுடைய உலகம் வேறு, நம்முடைய உலகம் வேறு, அவன் ஒரு பணக்கார வேதாந்தி, நாம் ஏழைகள். அவனுக்கு உலகம் மாயமாம், வாழ்வு பொய்யாம், மணம் ஒரு சிறைவாசமாம், காதல் ஒரு பந்தமாம், அவன் வாழ்நாளில் பகவத் சேவைதவிர வேறொன்றும் செய்ய மனம் இடந்தரவில்லையாம்!

உன்னை அவன் நிராகரிக்கிறான். பெண்கள் சமுகமே பேய்ச்சுரை என்று பேசுகிறான், ஏசுகிறான். நான் வெட்கத்தைவிட்டு, அவனிடம், உன்விஷயமாகப் பேசினேன். வேண்டினேன். கெஞ்சினேன். உன்னைக் கலியாணம் செய்துகொள்வது, நமது குடும்பத்தை முன்னுக்குக்கொண்டுவரும் பேருதவியாக இருக்குமென்பதை எடுத்துக்காட்டினேன். குப்பையில் கிடக்கும் மாணிக்கத்தை எடுத்துக்கொள், என்று கதறினேன். காந்தா! துளியும் தயங்காமல், கலியாணம் என்றபேச்சே எடுக்காதே என்று சோமு கூறிவிட்டான். நீகட்டிய மனக்கோட்டை நொருங்கிற்று, நானுங்கூட, உன்னைப்போலவே மனக்கோட்டை கட்டினேன் சோமு உன்னைக் கலியாணம் செய்துகொள்வான் என்ற நம்பிக்கை எனக்கிருந்திராவிட்டால், அவனுடைய வேதாந்தப்பேச்சை ஒரு விநாடிகூடக்கேட்டுக் கொண்டிருந்திருக்கமாட்டேன்.

பெரிய வேதாந்தியாம் அவன், பக்தனும், ஆண்டவனிடம் அபார அன்பு கொண்டவனும். காந்தா, இதைக்கேள், பணம்கிடைத்துவிட்ட பிறகு அதைப் போலப் பக்தராக இருப்பது எளிது. அவனுடைய வேதாந்தம், செல்வத்தினால் அவனுக்குக் கிடைத்திருக்கும் ஓய்வு நேரத்துக்கு ஓர் பொழுதுபோக்கு. அவனை நீ மறந்துவிடு. எத்தனையோ சீமான் வீட்டுப் பெண்களையெல்லாம், அவன் தாயார் அவனுக்காகப் பார்த்தார்களாம், அவன் ஒப்பவில்லையாம். கேள், காந்தா! வறுமை நோய்கொண்ட நம்மை அவன் ஏற்றுக்கொள்வானா? அவன் உன்னைத்திருமணம் செய்துகொள்ளமுடியாது என்று சொன்னதைக் கேட்டதும், என்மனம் பட்டபாடு நீ அறியமாட்டாய். அந்த ஊரில், அவன் எதிரில், இருக்கமனம் ஒப்பவில்லை,

பணம்! பணம்! பணம்! அதைத்தவிர உலகம் வேறெதையும் உள்ளன்போடு பூசிக்கக்காணோம். அதுகிடைத்தால் ஊர்திரும்புகிறேன். அந்தச்சோமு பேசும் வேதாந்தத்தைவிட, வண்டிவண்டியாக, அப்போது என்னால் பேசமுடியும். அந்தக்காலம் வரட்டும் பார்த்துக்கொள்வோம். நீ சோமுவை மறந்துவிடு. உன் 'கதி' என்னாகுமோ நானறியேன். அறிந்துதான் என்ன செய்யமுடியும்? அப்பாவும் அம்மாவும் என்மீது கோபித்து வைதால் நீ குறுக்கிட்டுத் தடுக்காதே. அவர்களுடைய விசாரம், என்னைத்திட்டுவதனாலாவது கொஞ்சம் குறையட்டும்.

இப்படிக்கு, உன்தம்பி இராகவன்.

கண்களிலே நீர் அருவியாக ஓடிற்று, இந்தக் கடிதத்தைப் படித்தபோது. வீடு முழுவதும் விசாரம், சோமுவைப்பற்றி நான் எண்ணிக் கொண்டிருந்தது போலவே, அப்பாவும் அம்மாவும் எண்ணிக்கொண்டிருந்தார்களாம். எல்லாருடைய எண்ணத்திலும் மண் விழுந்தது. என் காதல் பொய்மான் வேட்டையாகி விட்டது. என் மனதில் எழுப்பிய மாளிகைகள் மண் மேடாயின. கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்க நேரிட்டது. என் அழகை நான் சபித்தேன்; எனக்கு எதற்கு அழகு!

(10-ம் பக்கம் பார்க்க.)

திட்சிதர் வீட்டில்! (8-ம் பக்கத் தொடர்ச்சி.)

ரவு மாநாடுகளிலும், எவ்வளவு உத்வேகம்! காட்டு வெள்ளம் கரை புரண்டோடுகிறதே, அணைகோலி, அமைப்பு ஏற்படுத்துவாரைத்தானே காணோம். அது தானே, ஆரியருக்கு இன்னமும் இடந்தர ஏதுவாகிறது. என்று தணியுமிந்தச் சோகம்! எவர்போக்குவார் இந்தப் பரிதாபத்தை!! சுயமரியாதை மாநாட்டிலே தோழர் அழகிரிசாமி தலைமை தாங்கி இரண்டு மணிநேரத்துக்குமேல் ஆற்றிய ஆவேச உரையை, என்னென்பது! சுயமரியாதைச் சுடரொளிபறக்க, வீரம் வீறிட்டெழ, நகைச்சுவை நடனமாட, அறிவுத் தென்றல் அனைவர் உள்ளத்தையும் கவர, அழகுவழிய, உவமையும் கதையும், மேற்கொளும் மூதுரையும், கம்பன் கவிதையும் வள்ளுவன் குறளும் துள்ளிட, தோழர் அழகிரிசாமி, வறுமை, வாட்டம், வாழ்க்கையில் சுமை ஆகிய பட்டம்பதவிகள் மட்டுமேபெற்ற அழகிரி, அன்று பேசியதையோ, வியாபார உலகிற்கானும் நுணுக்கமான கருத்துடன், வாழ்க்கைக் கல்லூரி தரும் பாடங்களுடன், சேர்த்துரைத்த தோழர் தங்கவேலரின் உரையாடலையோ, இறந்தது என் மனைவி, கட்சிப்பற்றல்ல, என்று மார்தட்டி நின்ற குடந்தைத் தோழர் K. K. நீலமேகத்தின் முழக்கத்தையோ, கேட்டவர் தில்லைத் தீட்சிதரின் திருப்பாதந்தாங்கிகளாகத் தமிழர் கூட்டம் இருப்பதை இனிக் காணவே சகியார்! தமிழரின் கோட்டை எழச்செய்வர் என்பது திண்ணம்.

மூடச்சடங்குகளை ஒழி! கோயில் வருவாயைப் பொதுப்பணிக்கெனச் செலவிடு! ஆரியத்தை அழிக்க முற்படு! இவைகள் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள்! இவை நாட்டு நடப்பிலே காணப்பட்டுவிட்டால், இடரும் இழிவும், நமக்கேன் இருக்கும்! தமிழர் அதைக்கவனித்து ஆவன செய்தல் வேண்டும், இன்றே செய்யத்தொடங்குதல் நன்று என்பேன்.

திட்சிதர்வீட்டுக்குள் ஆதிதிராவிடருக்குக் கலியாணம் நடப்பதுபோல், வைதீகக் கோட்டையில், நமது மாநாடுகள் நடைபெற்றுவிட்டன, ஆனால் மாநாடு, முதல் அத்தியாயமே தவிர, முடிவுரையல்ல என்பது தென்னாற்காட்டுத் தோழர்களுக்கும், தமிழர் யாவருக்கும் நினைவிலிருக்கவேண்டும்.

ஜஸ்டிஸ், சுயமரியாதைக்காரர்கள், கனவுலகவாசிகளல்ல, கற்பனைலோகத்தில் குறட்டை விடுபவரல்ல. நாடு இன்றுள்ளநிலை அவர்களுக்குத் தெரியும். ஆபத்துச் சூழ்ந்திருப்பதை அவர்கள் அறிவர். எதிரிகள் எக்காளமிடுவதை அவர்கள் மறக்கவில்லை. இன்று மக்கள் மனதை மருட்டும் போர்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளாமலில்லை. போரில் நாம் வெற்றி பெற்றால்தான், எதுவும் ஈடேற வழிபிறக்கும் என்பதையும் மறக்கவில்லை. எனவேதான், யுத்த ஆதரவு மாநாடு, தோழர் முத்தையா முதலியார் தலைமையில் ஆங்கு நடைபெற்றது. அண்ணாமலைப்பல் கலைக்கழகப்பேராசிரியர் டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடு திறப்புவிழாவாற்றினர். சர். K. V. ரெட்டி நாயுடு அவர்கள், சர். செல்வத்தின் படத்தைத்திறந்து வைத்தார். நேசநாடுகள் வெற்றிபெறவேண்டும். அதற்கான உதவியை மக்கள் செய்யவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேறின. எனவே, போர்சம்பந்தமாக நமது கருத்தென்ன, நாட்டு அரசியல் சம்பந்தமாக நமது எண்ணம் யாது, சமுதாய சம்பந்தமாக நமது திட்டம் என்ன, என்ற இம்மூன்றையும் மூன்று மாநாடுகள் மூலம் விளக்கி விட்டனர் நமது தோழர்கள். இனி, வேலை துவங்கவேண்டியதுதான்! நீங்கள் செய்யப்போவது என்ன? சொல்லுங்கள், கேட்போம்.

செங்கற்பட்டு மாவட்ட நீதிக்கட்சி மாநாடு.

திருக்கழுக்குன்றம்

வரவேற்பு
T. சண்முகம், திருவொற்றியூர்.

தலைமை
பேராசிரியர்
S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.,

திறப்புவிழா
பெரியார் ஈ. வெ. இராமசாமி.

கொடி யேற்று விழா
டாக்டர் S. தருமாம்பாள் அவர்கள்

திராவிட நாட்டுப் படத்திறப்பு
கருவூர் ஈழத்து அடிகள், B. A.

மற்றுந் தோழர்கள்.

K. V. அழகிரிசாமி, திருப்பூர் மொய்தீன்,
C. P. சின்னராசு, S. V. இலிங்கம்,
ஆகியவர்களும் வருகின்றனர்.

கீழ்க்கண்டவர்கள் வரவேற்புக்கழக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்,

T. சண்முகம், திருவொற்றியூர், **ராவ் சாகிப் வேதாசல முதலியார்; முத்துலிங்க ரெட்டியார்,** பெருநிலக்கிழவர் கயப்பாக்கம்; **W. T. பாலசுந்தர முதலியார்,** திருக்கழுக்குன்றம்; **A. K. தங்கவேலர், T. P. S. பொன்னப்பனார்; துரைசாமி முதலியார்,** குன்னத்தூர்; **T. K. எல்லப்ப முதலியார்,** திருக்கழுக்குன்றம். மற்றுஞ் சிலரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

செயலாளர்கள்,
A. K. தங்கவேலர்.
T. P. S. பொன்னப்பனார்.

விளம்பரச் செயலாளர்,
C. N. அண்ணாதுரை, M. A.

மாநாடு திருக்கழுக்குன்றத்தில் மேத் திங்கள் 3ம் நாளி (3—5—42)ல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுளது.

"கஞ்சி நிதி லிமிடெட்"
காஞ்சீபுரம்.
28-வது ஸீரீஸ் ரூ. 1000, 500, 250, 100 & 50/- ஏலச்சீட்டுகள்
15-4-42ல் ஆரம்பிக்கப்படும். சந்தாதார்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும். K.R. சாரி, B. A. செகிரிட்டரி.
N. B. எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

திராவிடநாடு

ஞாயிறு] 19—4—42 [காஞ்சி.

சங்கராச்சாரி

பதவி
தற்கொலை!

திடுக்கிடவேண்டாம்! அழ ஆரம்பித்துவிடாதீர்கள்! அவர் செய்துகொள்வது பதவித் தற்கொலையே யொழிய, உயிரைப் போக்கடித்துக்கொள்ளும் செயலல்ல. இந்த நேரத்தில், சங்கராச்சாரியார், அரைப்படியை ஆழாக்காகக் காய்ச்சிய பாலிலே, சீனியும் குங்குமப்பூவும் கலந்து, சாரையும் பாதாமும் சேர்த்து நாதன் மீது பாரத்தைப்போட்டு விட்டு, பாலைப் பருகி, பஞ்சணை மீதுள்ள மான்தோலாசனத்தில் சாய்ந்துகொண்டு, மாதவரவுக் கணக்கையும் பாதகாணிக்கை வருவாயையும் பிரதானியர் கூறக்கேட்டு, எம்பெருமான் திருநாமம் என்றென்றும் வாழ்க, என்று பூரிப்போடு கூறிக்கொண்டிருப்பார். ஆகவே அவருக் கோராபத்துமில்லை. ஆனால், மன்னார்குடியில் ஏப்ரல் 11ந்தேதி மாலை பேசிய ஜகத்குரு சங்கராச்சாரியார், பிறருக்குக் கூறிய யோசனையின்படி அவரே நடப்பதாக இருப்பின், பல்லாக்கும் பரிவாரமும், பாதகாணிக்கையும் பட்டணப் பிரவேசமும், பணியும் பட்டாடையும், பேழையும் பிறவும் விடுத்து, துறந்து வெளியேறிவிட வேண்டி வரும். அது சங்கராச்சாரியார் என்ற பதவிக்குத் தற்கொலை செய்துகொள்வது போன்றதாகும். அக் கருத்தினைக் கொண்டே இத்தலைப்பு அமைந்துளதாதலின், அவரின் அடியார்கள், அழுதகண்களைத் துடைத்துக்கொண்டு, மேலும் படிக்கக் கோருகிறோம்.

ஏப்ரல் 11ந்தேதி, மன்னார்குடியில் ஜகத்குரு சங்கராச்சாரியார் பேசியுள்ளார். அவரது சொற்பொழிவிலே காணப்படும் சிலகருத்துகள், பிறருக்கு உபதேசமாக இருத்தலுடன், அவருக்கே, சட்டதிட்டமாகவும் அமைவதாயின், அவரது பதவியைத் துறந்து, பாதசாரியாகி, பாட்டாளியாகி, பாராருக்குழைக்கும் பண்பினராகி, அவர் வெளிவந்து விடுதல் வேண்டும்.

"நீதி கெட்டது, கெடுக என் ஆயுள்" என்றான் தமிழ் மன்னனொருவன். இதோ சங்கராச்சாரியார் அதுபோல், தமதுபதவியினால்வரும், பதங்கள், பாசங்கள், பார்செடவே உள்ளன வென்பதைத் தமது சொற்பொழிவால் விளக்கிவிட்டார். எனவே அவர் மறத்தமிழ் மன்னன் போல், "கெடுக என் பதவி" என்று கூறத்துணிவாரா என்று கேட்கிறோம்.

பயங்கரமான இந்தப் போர், பலரைப்பல கூற வைக்கிறது. சிலரை, நேற்றொன்றும் இன்றொன்றும் இனிவேறொன்றும் பேசவைக்கிறது. இந்த இயல்பு படைத்ததாலேயே காங்கிரசார், முன்பு, அஹிம்சை என்றனர், இன்று ஆயுதம் என்கின்றனர். சங்கராச்சாரியார் தாமும்சில கூறலே முறையானது கருதினார் போலும். அவர்சொன்ன சொற்கள் இவை.

"இவ்வருஷம் மிராசுதார்கள் தங்களுடைய நியாயமான செலவுபோக எஞ்சியிருக்கும் பணத்தை ஏழைகளுக்கு அன்னமிடுவதில் செலவுசெய்ய வேண்டுமென்றும் வீடுகட்டுவதோ, நிலம் வாங்குவதோ, ஆபரணங்கள் செய்வதோ, பாங்கியில் போடுவதோ, கூடாதென்றும், வியாபாரிகளும் இதரர்களும் அதே மாதிரி இவ்வருஷம் கிடைக்கும் லாபத்தை மேற்சொன்ன வழியில் வினியோகிக்க வேண்டுமென்றும், அந்தப் பணத்தைத் தன்னுடைய குடும்பச் செலவுக்கு உபயோகப்படுத்தாமல் அதை விஷமாகப் பாவிக்கவேண்டுமென்றும், ஸ்வாமிகள் கூறினார், என மித்திரன் தெரிவிக்கிறது.

ஈட்டிய பொருளில், வாழ்க்கைக்குத் தேவையானது போக, மீதியை, சொத்தாகவும் சுகபோகக் கருவியாகவும் மாற்றாமல், ஏழைகள் உய்யச் செலவிட வேண்டுமென்ற உருக்கமான இந்த உபதேசம், துறவு நிலைபூண்டுள்ளவரால், இல்லறவாசிகளுக்கு போதிக்கப்படுகிறது. மிகச்சரி! ஆனால், ஸ்வாமிகளின்நிலைமை என்ன? அவர் வாழ்க்கை இருக்கும் விதம் எப்படி? மேனிவாடாது, பாடுபடாது, பல்லக்குத்தூக்கிகள் வேகமாகச் செல்லவில்லையே, பக்த கோடிகள் மேலும் மேலும் பணந்தரவில்லையே, சூடிய பூ, வாடிற்றே, பட்டாடையின் பளபளப்பு மங்குகிறதே, பணியின் மெருகு குறைகிறதே, பஞ்சணையில் மல்லிகையின் காம்பு உறுத்துகிறதே, என்ற கவலைகள் தவிர வேறு கவலையற்று, பாதத்தைப்பலர் தடவிக் கண்களில் ஒத்திக்கொள்ள, "பரமனின் பிரதிநிதிநான்" என்று கூறிக்கொண்டு, கரி பரி காவலருடன் நாடு உலவி வரும் ராஜபோகமன்றோ சங்கராச்சாரியாருடையது. முதலில்லாவியாபாரம்! சோகமில்லாவாழ்வு! உழைப்பு கிடையாது! உல்லாசத்திற்குக் குறைவு கிடையாது! இங்ஙனம் இவர் வாழ்ந்துகொண்டு, மிராசுதாரர், வியாபாரி, மற்றவர், ஆகியோருக்கு இதோபதேசம் புரிவது, ஏதேனும் பொருளுடையதாகுமா! கன்னக்கோலான், களவின் கேடுபற்றியும், காமஉள்ளத்தான், ஒழுக்க போதனையும், கசடன் கற்றதனாலாய பயனையும், எடுத்துக்கூறுவது, எள்ளி நகையாடக் கூடியதன்றோ! சாமரம்வீச, சல்லாபிக்க, சோபித வாழ்வுக்குச் சொத்துத்தர, பரிவாரம் பெற்றுள்ள சங்கராச்சாரியார், வாழ்க்கைக்கு நியாயமான செலவுபோக, மீதியை ஏழைக்களிக்க வேண்டும் என்று கூறுகிறார். இந்த எட்டுச்சுரையைக் கண்டு எவரே போற்றுவர்! யாரை ஏய்த்துவிட முடியுமென்று இவர் கனவு காண்கிறார் என்று கேட்கிறோம்.

இல்லறவாசிகள், **நியாமான** செலவுபோக, மீந்த பணத்தை **விஷம்** எனக்கருதவேண்டுமென்கிறார் வேதவிற்பன்னர். வெகுநன்று. நாம், இல்லறவாசிகள், இன்னின்னவற்றையே நியாயமான செலவாகக்கொள்ளல் வேண்டும் என்றுங் குறிப்பிடத்தயார்! **விஷம்**, அவர்களிடம் கூடாது என்று விளம்பத்தயார். ஆனால் "ஸ்வாமிகாள்! தங்கள் விஷயம் என்ன? தங்களுக்கு-உலகமே மாயைஎன்ற தத்துவாசிரியருக்கு, துறவிக்கு, மடம் ஏன், சொத்து சுகம் எதுக்கு, பணம் பரிவாரம் ஆகுமா? விஷமென்று எந்தப்பணத்தைக் குறிப்பிடுகிறீரோ, அதனைத் தாங்கள் பருகியபடியே தானே இருக்கிறீர்? மற்றவர்களாவது, ஓரளவுக்கேனும்

உழைத்து, தமது திறமையையும் காட்டிப், பொருள் ஈட்டுகின்றனர். தாங்கள் உழைப்பதுண்டா? உடலில் உழைப்புதரும் ஓய்ச்சல் என்ற அனுபவம் தங்கட்குத் தெரியுமா? உழைத்தும் பயனில்லை என்ற நிலையில் உண்டாகும் சலிப்பு என்ற அனுபவம் தங்களுக்குண்டா? பசியை நீரறிவீரா! பஞ்சத்தில் அடிபட்டதுண்டா? இல்லையே! உழைக்காமல், ஊரார் உழைப்பில் உபாதானம் பெறுகிறீர். தங்களின் வாழ்க்கையின் வசீகரம், தங்கள் திறமையால் கிடைத்ததுமல்ல! பிறரின் மடத்தனத்தால், தங்கட்குக்கிடைப்பது. இத்தகைய வாழ்விலே இருப்பது நியாயமா? பிறருக்கு நீதிபுகட்டும் பெரியோய், உமது வாழ்க்கையின் நியாயம் யாது என்றுரைக்க முடியுமா—என்று சங்கராச்சாரியரை நாம் அறைகூவி அழைத்துக் கேட்கிறோம். அவரோ, அவரது அதிகாரம் பெற்ற வேறு யாரேனுமோ, கூறட்டும், கேட்போம்.

வாழ்க்கைக்கு நியாயமான செலவுபோக, மிகுவதை ஏழைகளுக்குத் தரவேண்டுமென்று இவர் மொழிகிறார். இவர் துறவியினுடைய நியாயமான செலவுபோக, மேலும் பணம் குவிப்பானேன்! இவரது இன்றைய வாழ்க்கை நியாயமான செலவினங்கள் கொண்டதுதானா!

“துக்கஞ்சுகமான சுட்டறிவு கேட்டவர்க்குத்
திக்குண்டோ வெங்குஞ் சிவாலயமா மக்கினிக்குப்
பிச்சை போதுநீழனீர் பேரிதுவே பேசார்தம்
மிச்சையிருப் பேகாந்தத்தே”

துறவியின் இலக்கணத்தை இங்ஙன முரைக்கிறார் கண்ணுடைய வள்ளலார், ஒழிவிலொடுக்கமெனும் நூற்கண்.

பசித்தால் புசிப்பது, இருக்கல் பொதுச்சாவடியோ, மரநிழலோ, தாகந்தணிய நீர், ஏகாந்தத்தில் இச்சை, இவையே துறவியின் இலக்கணமாம். இத்துடன், சங்கராச்சாரியாரின் இன்றைய வாழ்க்கை முறையைச்சற்று ஒப்பிட்டுப்பாருங்கள்! நியாயமா அவர் வாழும் முறை? எவ்வளவு சுகானுபவம்! உபதேசம் ஊராருக்கு, இவர்க்கோ உல்லாசம்! இது நீதிதானா? என்று கேட்கிறோம்.

அரசஉரிமையை, அந்தப்புறத்தை, அழகுமனைவியை, கொஞ்சும்குழவியைத் துறந்தார் புத்தர். அவர் துறவி: இவர், மடம், மடஊழியர், மதியிழந்தோர் தரும் தனம், அத்தனத்தாற்பெறும் இன்பம், இவற்றிலே நீந்துகிறார். இவர் உபதேசிக்கவும் முன்வருகிறார்! ஊராரும் கேட்கின்றனர்! அதிலும் எந்த இடத்தில்? தமிழகத்தில்! அரச போகத்தைத் துறந்த இளங்கோவடிகளென்ன, காதலையும் க்ருந்தனத்தையுந் துறந்த மணிமேகலையென்ன, மற்றும்பலரும் வதிந்த இங்கு, துறவுக் கோலமும் துரைமார் வாழ்வுக்கு மேற்பட்ட தான வாழ்வும் பெற்றுள்ள ஆரியத்தலைவர், உபதேசம் செய்கிறார்.

துறவியோ, தவம்புரிவோர். தவத்தின் இயல்போ எப்பொருளிடத்தும் பற்றிலாமை. பொருளோ, பற்று உண்டாக்கும், மோகமுறச்செய்யும், எனவே பற்றற்ற பண்பு வேண்டினோர் உடைமை வேண்டார், என்றார் வள்ளுவனார்.

“இயல்பாகு நோன்பிற் கொன்றின் மையுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து”

எனவே, சங்கராச்சாரியார் சாற்றியபடி தாம் நடக்க முன்வரவேண்டும். உழைத்துவாழ, ஊராரின் உபதேசகராக இராமல், பாடுபட, முன்வரவேண்டும். மடத்தை விடவேண்டும், மாநிதி துறக்கவேண்டும். இதந்தேடல்கூடாது, இனத்தாரை வாழவைக்கும் இயல்பினை நீக்கவேண்டும், மனிதராகவேண்டும். மனது மறுபிறவி எடுக்குமா!!

மற்றொன்று கூறுகிறார், ஆஸ்தீகமும் அறியாமையும் ஒன்றேஎன்று கூறுவதுபோன்றுளது அஃது. **யுத்தம் முடியும் வரையிலாவது பகவன் நாமத்தைச் சொல்ல வேண்டும்** என்கிறார்.

இதிலிருந்து இரண்டு எண்ணங்கள் எவர்க்கும் எழும். ஒன்று, இதுவரை பகவானைத் தொழவில்லை என்பது. மற்றொன்று, இடருற்றபோது ஈசனைவழுத்தினால் போதும் என்பது. இரண்டும், எத்தனை மடமையின் சிகரம் என்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை. மக்கள் இன்றுவரை, பகவானை மட்டுமல்ல, அவரது பிரதிநிதி யென்றுரைக்கும் “பரப்பிரம்ம சொரூபிகளையும்” தொழுது வந்தனர், வருகின்றனர். கண்ட பலன் என்ன? இதோ குண்டுவிச்சு! கடலில் கொந்தளிப்பு! உள்ளத்திலே பதைப்பு!! இதுவரை தொழாதவர் போலவும், இன்றேனும் தொழுதுபாருங்கள் என்று, கெஞ்சும் முறையிலும் சங்கராச்சாரியார் பேசுவதின் சூதை உணருங்கள். சண்டை நேரத்திலே, மக்கள் உயிரையும் உடமையையும், ஊரையும் உற்றாரையும் காப்பாற்றும் வேலையிலே இருந்துவிட்டு, கோயிற் பெருச்சாளிகளுக்குக் கொழுப்பேற்றும் வேலையைச்செய்ய மறந்துவிட்டால், ஆரிய இனம் இளைக்குமே என்றெண்ணியே, போர்முடியு மட்டேனும் ஆண்டவனைத் தொழுவீராக என்று கூறினார்.

இத்தகைய பேச்சு, பாமரரை மேலும் மடத்தனத்தில் ஆழ்த்தும் சூது என்று நாம் கூறுகிறோம். இவரது உபதேசத்தின்படி, முதலிலே, இவர், தமது சொத்துச் சுகத்தைத் துறந்து, பாடுபட்டுழைத்து, பசித்தால்புசித்து, வியர்த்தால் குளித்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளட்டும், பார்ப்போம். சங்கராச்சாரியார் என்றபதவியைத்துறக்கத்தயாரா? என்று கேட்கிறோம். உண்டா பதில்! ஊரார் கேட்பரா!!

சென்னைவாசிகள்!

சென்னையைவிட்டு வெளியேறுபவர்களில் பெரும்பாலோர் காஞ்சீபுரத்தில் வந்து தங்குகின்றனர். ஸ்பெஷல் ரயில்களும், மோட்டார் பஸ்களும், வண்டிகளும் வந்தபடி உள்ளன.

காஞ்சியில் A. R. P.

காஞ்சிபுரத்தில் A. R. P. திட்டம் மிகஜரூராக நடைபெற்று வருகிறது. பூரண இருட்டடைப்பும், பரீட்சார்த்த சங்கு ஒலிப்பும், பயிற்சியும் நடைபெறுகின்றன. பொதுமக்கள் அமைதியாகவே நடந்துகொள்கின்றனர். போலீஸ் ஏற்பாடுகள் நன்றாக உள்ளன.

நெசவாளருக்கு.

காஞ்சிபுரம் நெசவாளருக்காக நிருவப்பட்டுள்ள கூட்டுறவு சங்கத்திற்கு, தோழர் K. சாம்பசிவ செட்டியார் தலைவராகவும், தோழர் A. பாலகிருஷ்ண முதலியார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சின்னக்காஞ்சிபுரம் பார்ப்பனரல்லாதார் கழகம்.

மேற்படி கழகத்தில், திருவிளையாடற் புராண ஆராய்ச்சி, பிரதி ஞாயிறு, வியாழக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.

தீட்சிதர் வீட்டில்! (2-ம் பக்கத் தொடர்ச்சி.)

தை மாற்றிக்கொள்ளாமல் இருக்கின்றனர். என்பது, அன்று தலைமையுரையில் வெளிப்பட்டது. பாண்டியனார் கூறினர் "அவ்வளவு தொலைவிலே வடநாட்டார் என்ற பாகுபாடுமட்டுமே இருக்கும் என்று எண்ணினேன். ஆனால், அங்கே இருந்தபார்ப்பனருக்கு, ஆரிய உணர்ச்சியும் அகம்பாவமுமே இருக்கக் கண்டேன்" என்றுரைத்தார்.

சர். கிரிப்சின் மாளிகையில், போட்டோக்காரர்கள் தங்கியிருந்தனராம். கிரிப்சைக்காண யார் வந்தாலும், உடனே போட்டோ எடுத்துப்பத்திரிகைகளுக்கனுப்பும் பணி அவர்களுடையது. சிரிப்பு, கைகுலுக்குதல், காரில் ஏறுதல், இறங்குதல், முதலிய பலகாட்சிகளைப்படம் பிடித்துவந்த அந்த போட்டோக்காரர்கள், பெரியாரும் அவரது சகாக்களும், மாளிகைக்குள் நுழைந்ததும் ஓடிவந்தனராம்! கண்டனராம், உடனே படமெடுக்காது, பழயபடி தமது தங்குமிடத்துக்கே சென்றுவிட்டனராம்.

இதனைப்பாண்டியனார் கூறினர். ஆத்திரத்தால் தோழர்கள் துள்ளினர். எவ்வளவு குரோத மனப்பான்மை பாருங்கள் அந்த போட்டோக்காரர்களுக்கு! ஏன் அது பிறந்தது எனில் அவர்கள் பரப்பிரம்ம சொரூபிகள், பார்ப்பனர்கள், ஆரியர்கள், ஆகவே, நமது தலைவர்களின் உருவைக்கண்டு உதாசீனம் செய்யத் துணிந்தனர். இத்தகைய குரூரமான மனப்பான்மை ஆரியருக்கிருப்பதை, நமது கோடரிகள், கோணங்கிகள், மரமண்டைகள், தெரிந்துகொள்ளாது இருக்கின்றனவே.

பெரியார் தமது சொற்பொழிவிலே இதுபற்றி வேடிக்கையாகக் கூறினர். "எனது தாடியையும், பாண்டியனின் கரிய நிறத்தையுங் கண்டதும், பறந்தே விட்டனர், அந்தப் பார்ப்பனர்கள்" என்றார்.

"தலைவரே! தாம்கூறியதுகேட்டு, நாங்கள் சிரிக்க மறுக்கிறோம். சீற்றம் எம்மைப்பிரியமறுக்கிறது. அவர்களின் இறுமாப்பின் இடுப்பொடிவது எந்நாளோ என்றே ஏங்குகிறோம். எவ்வளவு துவேஷமிருக்கிறது அந்த சவுண்டிகளுக்கு! படமெடுக்காது ஓடிய அந்தப் பார்ப்பனர்கள், கூளம் பறப்பதுபோல், தமிழரின் படைதிரண்டால், திக்கெட்டும் பறந்து போவாரல்லவா! குப்பைமேட்டுக்குப்போய்ச் சேரவேண்டியதைக் கூடத்திலே வைத்திருந்தால், வீட்டுக்கு அழகாகுமா! அதுபோல், பிச்சைபுகவேண்டிய நச்சுக்கூட்டத்தை நாடாளும் இடத்திலே அண்டவிட்டதால், இந்த அனர்த்தமும் வரும், இதற்குமேலும் வரும். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் வாலைக் குழைத்துக்கொண்டு வண்டுருட்டும் பழமே நாடிச்செல்லுமாம். அதுபோல், இந்தச் சோற்றுக்காகச் சுற்றித்திரியும் சொரூபிகளை, டில்லி மாளிகையில் வைத்தாலும், உடம்போடு உண்டானகுணம் மாறுமா! பேய்ச்சுரைக்குத் தேன்பெய்தும்பயனென்ன!! அதுபோல் ஆரியருக்கு நாம் எது செய்துஎன்ன? அவர்கள், சமயத்தில் நமது இனத்தைக்கெடுக்கவே துணிவர்" என்று மாநாட்டில் இருந்த தோழர்களிற் பலர் கொதித்துக் கூறினர்.

ஆரிய ஏடுகள் என்ன செய்தும் ஆரியத்தலைவர்கள் காரியக்கூத்தாடியும், கண்டபலன் சூன்யமே என்பது பிற்பகல் விளங்கிற்று. கிரிப்ஸ் திட்டம் தோற்றுப் போனது கேட்டு இம்மாநாடு வருந்தவில்லை என்ற தீர்மானத்தைப் பெரியார் பிரேரேபிக்க, தோழர் அண்ணாத்துரை ஆதரித்துப்பேசியபிறகு, திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்தார்.

திராவிடநாடு தனிநாடாக அமைந்துவிட்டால், தீட்சிதர் வீட்டுக்கு இன்றுள்ள மகிமையும், ஆரியத் திருக்கூட்டத்துக்குள்ள திமிரும், அக்கிரகாரத்துக்குள்ள ஆணவமும் இருக்கமுடியுமா? போரில் சிக்கிக் கொண்ட தமிழகத்திலே, இன்று காணப்படும் கோழைத்தனம் இருக்குமா? எதிரிக்கு உளவுகூறும் உலுத்தர்களும், வம்பர்களும் விஷவாயர்களும், பீதி கிளப்பும் பேதையரும், இருக்கமுடியுமா? போர் புரளும் நேரத்தில் அரசியல் பேரமாநடக்கும்! கும்பாபிஷேகமும் கோயில்குதர்க்கமுமா இருக்கும்! படை ஒலியன்றோ கேட்கும்! பட்டாளத்தில் சேர இளையோரும், அவரை இடித்துத்தள்ளிக்கொண்டு முன் வரிசை எமக்கு என்றுரைக்கும் முதியோரும், படைக்கலத்தை எடுத்துத் தந்திடும் பதுமையரும், நிரம்பியவோர் நற்காட்சியன்றோ இங்கிருக்கும்! காட்டரணும் கடலரணும், நதியரணும் பதியரணும் இருப்பதுடன், மனை அரணும் மன அரணும் இருந்திருக்கும். இன்றுள்ள விதியும், சதியும், இருக்குமா! சிங்கங்கள் கிளம்பிவிட்டால், நரிக்கூட்டம் நிற்குமா! புலி பாய்கையில் பூனையாதடுக்கும்! திராவிடர் கிளம்பிடின், ஆரியரோ ஆர்ப்பரிப்பர்! திராவிடநாடு ஆரியரின் வீடாக இருத்தலால், நமது தலைவர்கள், வடநாடு சென்ற காலையும், வெள்ளையர் முன்னிலையிலும் அவமதிப்பாக, ஆரியர்களால் நடத்தப்படுகின்றனர். அதனைநமது தலைவர்கள் நமக்குக்கூறுகின்றனர், நாம் கேட்கிறோம், நமது செவிகள் அறுக்கப்படவில்லை!

தமிழரைத் துச்சமாகப் பேசினர் கனகவிசயன் எனும் ஆரிய அரசர், என்று பாணர் கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன், படைகடலெனத் திரட்டி, மலை பல கடந்து, மாநதிகள் தாண்டி, காடுபலகடந்து வீடு மறந்து வெஞ்சமர்புரிந்து, ஆரிய அரசரை முறியடித்து அவர் தம் தலையிலே கல்லைச் சுமந்து வரச்செய்தான், என்றுரைக்கும் சிலப்பதிகாரத்தைச் சுமைதாங்கிபோல் சுமந்துகொண்டிருக்கும் நாம், டில்லி நகரில் ஆரியர் திராவிடத்தலைவர்களை, ஒரு பெரியாரை, ஒரு சிற்றரசரை, மற்றோர் மிராசுதாரரை, மற்றோர் மலை காடு மண்டலம் படைத்த மன்னர் வழிவந்தோனை மதியாது நடந்த மமதையைக் கேட்கிறோம். இனி நமக்கேன் சிலப்பதிகாரம்! செந்தமிழர் எனும் பெயர் ஏன்?

இவைபோன்ற இன்னலும் இழுக்கும் இனியும் நமக்கிலாமற் போகவேண்டுமாயின், சிதம்பரமாநாட்டிலும், அதுபோன்ற மாநாடுகளிலும், நாட்கூடுவதும் பேசுவதும், பிரிவதுமாக இருக்கும் முறைமாறி, கட்டுப்பாடுண்டாக்கி, கருமமே கண்ணாகி, கோட்டைகள் கட்டும் பணியில் இறங்கியாக வேண்டும். இல்லையேல் வாழ்வு இல்லை. தோழர்கள் K. K. நீலமேகம், A. K. தங்கவேலர், K. R. G. பால், நீடாமங்கலம் ஆறுமுகம், மன்னார்குடி பாபு செட்டியார், வேலூர் சின்னராஜி, திருப்பூர் மொய்தீன், மற்றும் பலப்பலர், பேசினர் மாநாட்டில், தீப்பொறி பறந்தன! தேன்மொழி வழிந்தது. பயன் என்ன? தென்னாற்காட்டில் இந்த ஆண்டு முடிவதற்குள் எத்தனை ஆயிரம் அங்கத்தினர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேருகின்றனர், என்பதைப் பொறுத்திருக்கிறது, பயன். வரவேற்புக் கழகத்தலைவர் கோபாலகிருஷ்ணபிள்ளை, கடலூர் தெய்வசிகாமணி, நெசனூர் ராமசாமி செட்டியார், குச்சிப்பாளையம் துரைசாமி ரெட்டியார், விழுப்புரம் கோவிந்தராஜலு நாயுடு, விருத்தாசலம் முனுசாமி, புவனகிரி நமசிவாயம் ராமலிங்கம், சிதம்பரம் கலியாணசுந்தரம் அன்பழகன், மற்றும் பலப்பல வீரர்கள், மாநாட்டுக் காகப்பலநாள் உழைத்து, வெற்றிகரமாக நடத்தினர். இவர்களின் உழைப்பு, கட்சியின் உருப்படியான வேலைகளுக்காகவும் இருப்பின், நமதுநிலை எவ்வளவு உயரும் என்பதை எண்ணிப் பாருங்கள். திராவிடர், தீரமற்றவர்களா, திறமற்றவர்களா! கூனிய உள்ளமும் குனிந்த வாழ்வும் கொண்டவர்களா! தனமற்றவர்களா, வகையறியாதவர்களா! எல்லாம் உண்டு. ஒன்றுதானில்லை. தொடர்ந்து பணியாற்றுவதில்லை. அது இருப்பின், நம்மை வெல்பவர் யாருமில்லை. ஜஸ்டிஸ் மாநாட்டிலும், மறுதினம் நடந்த சுயமரியாதை, யுத்த ஆத

(5ம் பக்கம் பார்க்க.)

சிறுகதை

கண்ணம்மா

(கஜேந்திரன்.)

“பொத்” தென்று ஓசை கேட்டதும் அருவியினருகே இருந்தயாவரும் திடுக்கிட்டனர். அங்கே மகிழ்ச்சியுடன் குளித்துக் கொண்டிருந்த அணங்கி ஒருத்தி, கால்தவறி அருவியின் அடியிலிருக்கும் குளத்தில் விழுந்து முழ்கியது வேலைக்காரி முனியம்மாள் வயிற்றில் இடிவிழுந்தது போன்றிருந்தது. “ஐயோ” என்ற வாயைப் பிளக்கும் குரல் கேட்டவுடன் அருவிக்கண்மையிலிருந்த ஆடவரும் பெண்டிரும் விரைந்து சென்று குளத்தைக் கூர்மையாகப் பார்த்தனர். அப்பழி வாங்கும் குளத்தில் குதித்துக் காரிகையைக்காப்பாற்றுவார் அக்கூட்டத்தில் ஒருவருமில்லையென்றே தோன்றிற்று. குளத்தில் கண்ணம்மா தண்ணீர் மட்டத்திற்கு வந்து மின்னற்கொடிபோல் மீண்டும் மறைந்தவமயம் “அழகப்பரின் மகள் கண்ணம்மாவைக் காப்பாற்றுவாரில்லையா?” என்று அழுத வண்ணம் முனியம்மாள் கூறியதும், திடீரென்று பாய்ந்தான் குளத்தில் ஓர் வாலிபன்!

சில விநாடிகள் வரை காத்திருந்தும் வாலிபனோ கன்னியோ, வெளியே காணப்படாததால் வாலிபனும் மாண்டொழிந்தான் என்றங்கிருந்தோர் தீர்மானித்துப் பெருமூச்சுவிடும் சமயம், ‘கடகட’ வென்ற சப்தத்துடன் வாலிபன் சிரசு முதலில் தென்பட்டது. ஒரு கரத்தால் காரிகையைக் கட்டியணைத்துக்கொண்டு மற்றொரு கரத்தால் நீருடன் போர்புரிந்து கரையை நோக்கி நீந்திவந்தான். கரையையடைந்த கட்டழகனாகிய நகமன்னன் கண்ணம்மாவிற்கு முதற்சிகிச்சை செய்து முடித்த பின்னர் அழகப்பக் கவுண்டர் வீட்டிற்கு முனியம்மா பின்தொடர எடுத்துச் சென்றான்.

மயக்கமுடன் படுத்திருந்த கண்ணம்மா ஒருபக்கமிருக்க திராவிடர் கல்லூரித் தலைவர் அழகப்பர் நகமன்னனுடைய கைகளைப்பிடித்துக்கொண்டு, ‘அப்பா! இவ்வுதவிக்கென்ன கைம்மாறு செய்யவல்லேன். காலத்தினாற் செய்த உதவியை நான் ஞாலத்தினும் மாணப்பெரியதாய்க் கருதுகிறேன். உன் தந்தை அரங்கசாமி நாயுடுவைப் போன்றே நீ தயாளகுணம் படைத்துளாய். பரோபகார சிந்தையுடைய அறிவுமிக்க நீ வாழ்க்கையில் வெற்றித்திருவுடன் வாழ்வாயாக!’ என்றுபகன்று தன்வந்தனத்தையும் மகிழ்ச்சியையும் தன் ஒரே மகளிடத்து வைத்திருந்த விசுவாசத்தையும் தெற்றென விளக்கினார். இவ்வார்த்தைகளை யெல்லாம் கேட்காதவன்போல் ‘கண்ணம்மா பூரணமாய்க் குணமடையும் வரை வெகுகவலையோடு பார்த்துக்கொள்ளலவசியம்’ என்று கூறி விடைபெற்றுத் தன்னில்லமடைந்தான் அத்தமிழிளைஞன்.

“கண்ணம்மா, நீ அறிவிற்சிறந்த அணங்கல்லவா, நாமிருவரும் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களென்பதை மறந்து விடுகின்றாயே! நான் நாயுடு குலத்தைச் சேர்ந்தவனாதலின் உன்னைக்காதலிக்கவும் ‘கண்ணம்மா என் காதலி’ என்றழைக்கவும் உரிமை எனக்கேது? நம்முடைய மணத்திற்கென் தந்தையும் உந்தனைப் பெற்றாருமிசையார். ஆகலின் கிட்டாக்கனிக்குக் கொட்டாவி விடாமல் தந்தைதாய் சொற்படி நட” என்று குற்றால நீர்வீழ்ச்சிக்குப் பலியாகப்போக விருந்த கன்னியை நகமன்னன் காப்பாற்றிய ஐந்தாம்நாளன்று மாலை அவனுடைய வீட்டின் பின்புறத் தோட்டத்தில் நகமன்னன் கூறவே, கண்ணம்மாவின் கண்களினின்று நீர் பெருக்கெடுத்தோடியது.

தான் குளத்தில் விழுந்தபின்னர் நடந்தவற்றையெல்லாம் வேலைக்காரி முனியம்மாவிடமிருந்து அறிந்தாள், தன்னைக் காப்பாற்றியது தன் தந்தையின் நெடுநாளைய நண்பர் வழக்கறிஞர் அரங்கசாமிநாயுடுவின் மூத்தமகன் நகமன்னனென்றறிந்ததும் அவளையுமறியாமலே அவளகத்தில் அன்பான உணர்ச்சி எழும்பியது.

அத்தமிழணங்கு அன்பு, அழகு, அமைப்பு, ஆதரவு ஆகிய சிறந்த குணங்கள் யாவும் குறைவறப் பெற்றிருந்தாள். பத்தாண்டுகள் நிரம்பப்பெற்ற பொழுதிருந்தே செந்தமிழ் நாட்டுத் தண்டமிழ்ப் பெரியார் கண்ட தன்னுணர்வியக்கமதில் தீராப்பற்றுக்கொண்டிருந்தாள். பிறவிமொழித் தமிழை அவள் நேசித்த விதம் புரட்சிக்கவிதைக் கவி பாரதிதாசனாலும் கூறவியலாது! படித்துப்பெரியதோர் பட்டம் பெற்றிருந்தும் தன்தந்தை இன்னமும் மதச்சின்னமாகிய அழுக்குப்படிந்த நாமம் போட்டுக்கொள்வது, கண்ணம்மாவிற்கு வெறுப்பூட்டும் மூடக் கொள்கையாகவே தோன்றிற்று. “ஆரியம் அழிக்கப்பட்டபோது, கலப்பு மணம் காதல் மணம் நடைபெறும்போது, திராவிடம் விடுதலை பெற்றுச்செழிப்புமிக் குடையதாகும்,” என்பதே அவள் கண்டமுடிவு!

நகமன்னன் பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ., படித்து முடித்துவிட்டு வீட்டில் தூயதமிழின் இனிமையையும் சுவையையும் பருகிக்கொண்டிருக்கும் சமயம் இது.

அவனும் அவளைப்போன்றே மதவிரோதியாயினும், சீர்திருத்த யாதார்த்தவாதியாம் வைக்கம் வீரரைத்தலைவராகக் கருதினனாயினும், “தந்தை சொல்மிக்க மந்திரமில்லை” என்ற வாக்கினையும் மறக்காதவனாதலின், முன்னர் கூறப்பட்ட வண்ணம் “உன்னை யான் முழுமனத்துடன் காதலிக்கிறேனாயினும், நாமிருக்கும் நிலையை யோசித்து, நாமிருவரும் சதிபதிகளாவோமென்று எனக்குத் தோன்றவில்லை” என்று மேலும் கூறிய வண்ணமாய் அவளுடைய அழுகுவழியும் வதனத்தைக் கைக்குட்டையால் துடைத்தான்,

“எனக்கு அங்ஙனமிருப்போமென உறுதியாகத் தோன்றுகிறது ” என்று உறுதியுடன் பதிலளித்தாள் கண்ணம்மா.

“நீ கூறுவது வியப்பளிக்கின்றது, எவ்வாறு நீ என்னை மணக்கமுடியும்?”

“நீங்கள் என்னை வெறுத்தால்தான் நான் மணக்க இயலாது!”

“கண்ணினுள் மணியே,! அவ்வாறல்ல. உன்னை நான் முழுமனத்துடன் காதலிக்கிறேன். எப்பொழுது பார்த்தாலும் இவ்விரண்டாண்டுகளாக உன்னுடைய நினைவு தான். உன்மதிவதனம் கடந்த நான்கு நாட்களாக என்முன் தாண்டவமாடுகிறது. அழகிற் சிறந்த அணங்கே! சங்கநிதி, பதுமநிதி, முதலியனவெல்லாம் உன்முன் எம்மாத்திரம். ஆனால்......

“ஆனால் என்ற முட்டுக்கட்டை வேண்டாம். என்னைத்தவிர இதர மங்கையை ஒருவிநாடியும் சிந்திப்பதில்லை என்று, வாக்குறுதி கொடுங்கள்”

“அதோ ஒளிவீசும் திங்கள்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன்கரத்தைத் தீண்டிய இக்கரம் வேறொருத்தியை நாடாது. இதுமுக்காலும் உண்மை”

(11ம் பக்கம் பார்க்க.)

ரோமாபுரி ராணிகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி.

"அவள் எங்கே இப்போது" என்று பசியுடன் கேட்டான் பாதகன்.

"கண் பஞ்சடைந்து, நரைமூதாட்டியாக இருக்கிறாள்" என்றனர் பிரதானியர். மன்னன் சித்தம் சோர்ந்தான். பிறகு கேட்டான், "அவளுக்குச் சந்ததிகள் உண்டோ" என்று. ஒருபேத்தி உண்டு" என்றனர் பிரதானிகள். "மிகச்சந்தோஷம். அவள் பேரழகியாகவே இருக்கவேண்டும். பிடித்திழுத்துவா அவளை" என்று மன்னன் உத்தரவிட்டான். பாட்டியின் பிரதாபத்தைக்கேட்டு பேத்திக்குத் தூதனுப்பிய மன்னனின் மமதையை என்னென்பது!

இங்ஙனம் மன்னனின் கவனத்திற்காளான குமரியின் பெயர் **லோலியா பாலினா** என்பதாகும். மாசிடோனிய மண்டல கவர்னரை மணஞ்செய்துகொண்டு, மிகச் சுந்தராங்கியாகிய பாலினா குறைவற்ற மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தாள்.

"உடனே ரோம் நகர்வந்துசேர்! வரும்போது உனதுமனைவி பாலினாவையும் அழைத்துவா" என்று ஓலை வந்தது அரசனிடமிருந்து. **மேம்மியஸ் ரீகுலஸ்** என்ற அந்தக்கவர்னர் கட்டளைப்படி நடந்தான். தன் மனைவியை மன்னன் மணஞ்செய்து கொள்ள, சம்மதித்தான், சம்மதிக்கவில்லையேல், அவன் தலை தரையில் உருளும், விதவையின் தலை, மன்னன் மடியில் சாயும்! இதைவிட, சம்மதிப்பதே சரிஎன்று துணிந்தான், சொரணையற்ற அந்தச்சீமான். பாலினாவுக்கும் இந்தச்சம்பவம் பழம் நழுவிப்பாலில் வீழ்ந்ததுபோல் இருந்தது. படையாள்வோனின் மனைவியாக இருப்பதைவிட பாராள்வோனின் பட்டமகிஷியாவது, சந்தோஷிக்கத்தக்கது என்று அவள் கருதினாள், அரசனின் மனைவியானாள்! அரசியாகவில்லை!! ஏனெனில், வெகுவிரைவில், அவள்மீதும் வெறுப்புகொண்டு, மன்னன் விலக்கிவிட்டான். விசாரவதியாகி, சிலகாலம் பாலினா வாழ்ந்தாள், பிறகு அவளும் கொடுமையான கதியே பெற்றாள்.

மூன்றாவதாக, முடிதரித்த முரடன், **சீசோனியா** என்பவளை மணஞ்செய்து கொண்டான். அவள் அழகற்றவள்! ஆணவக்காரி! ஆனால் அவளிடந்தான் அரசனுக்கு அமோகமான ஆசை! அவள் இஷ்டத்தின்படி நடக்கலானான்! விதவிதமாக ஆடை அணியச்செய்து அவளை வெளியே அழைத்துச்செல்வான். போர்வீரன் உடை அணியச்செய்து குதிரைமீதேறித் தன்கூட வரச்செய்வான். ராஜாங்க உபசாரம், விருதுகள், முதலியவற்றை அவளுக்கு வழங்கினான். தன் ஆணைக்கு மக்கள் அடங்குவது போலவே, சிசோனியாவின் ஆணைக்கு அடங்கவேண்டும் என்றுஏற்பாடுசெய்தான். அழகற்ற இந்த அகந்தைக்காரிக்கு அரசன் இவ்வளவு கட்டுப்பட்டது ஆச்சரியத்தையே தந்தது.

காலிகூலாவின் ஆட்சியினால் விளைந்த கொடுமையைச் சகிக்கமாட்டாதவர்கள் அவனைக் கொலைசெய்யச் சதிசெய்தனர். அத்தகைய சதிகாரரில், சாபினஸ் என்பானே வெற்றிபெற்றான். காலிகூலாவைக் கொலைசெய்துவிட்டனர்! ரோம் நகரத்திலிருந்த குடும்பங்கள் அன்று அடைந்த ஆறுதலுக்கு அளவில்லை. அரசனின் மரணத்தைக்கண்டு சிசோவியாவும், அவள் மகளும் அழுதுகொண்டிருக்கும்போது, **லூபஸ்** என்பவன் சீசோனியாவைக் கொன்றுபோடும் எண்ணத்துடன் வந்தான். தனக்கு வரஇருக்கும் தடுக்கமுடியாதஆபத்தைக்கண்ட சீசோனியா, தானே வேண்டிக்கொள்வதுபோல், லூபசை நோக்கி, தன்னைக்கொன்று விடும்படி கேட்டுக்கொண்டாள். அதற்காகவே அங்குவந்தவன், தங்கு தடையின்றி, அந்த "தர்மகைங்கரியம்" செய்து முடித்தான்.

தும்ஸ்தாவின் பெண்! 4-ம் பக்கத் தொடர்ச்சி.

குமஸ்தாவின் பெண் நாடகத்திலே, கதாநாயகன் இராமுவை, அவன் தாயாரே சீதையைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்லியும், இராமு மறுத்துவிட்டான். என்வாழ்க்கையில் என் தம்பியே, சோமுவைக் கேட்டுப் பார்த்தும் பயன் ஏற்படவில்லை. பாபம்! கேட்குமுன்னம் அவன் என்னென்ன எண்ணினானோ தமக்கை தங்கப்பதுமை போன்ற அழகுடன் இருக்கிறாள் என்று யாரார் புகழக்கேட்டானோ தெரியவில்லை. தரித்திரத்தால் நான் வாடக்கூடாது, தனவந்தனை மணம்செய்துகொண்டு சுகமாக வாழவேண்டும், கண்குளிரக்காணவேண்டும் என்று எண்ணியிருப்பான் "என் தமக்கை கணவன் பெரிய தனவந்தன்" என்று கூறிப் பெருமைபெறலாம் என்று கருதியிருப்பான். சகஜந்தானே, அவன் நேரிலே கேட்டும் சோமுமறுத்துவிட்டது, என் துரதிர்ஷ்டமா? தலைவிதியா?

குமஸ்தாவின் பெண் நாடகத்தை நான் கண்டபோது நினைத்தேன், கதாநாயகி சீதாவே, இராமுவிடம் தன்காதலைத் தெரிவித்திருந்தால், காரியம் பலித்திருக்கும் என்று, கூச்சத்தால், சீதா இராமுவிடம் உண்மையை உரைக்கவில்லை. அது தற்கொலையில் முடிந்தது. நானும் அந்தக்கதிதான் பெறவேண்டுமா என்று பயந்தேன். கூச்சத்தை மறந்தேன். என்மனதிலே கொந்தளித்துக்கொண்டிருந்த எண்ணங்களைக் கடிதத்தில் எழுதினேன். காந்தாவிடம் கொடுத்தனுப்பிவிட்டு, மார்பு துடிதுடிக்க, கண்கள் மிரள மிரளக் காத்துக்கொண்டிருந்தேன். நெடுநேரங்கழித்து வந்த காந்தாவின் முகத்தைக் கண்டதும் காரியம் கைகூடவில்லை என்று புரிந்துவிட்டது.

"அக்கா" அவர் படித்தார் கடிதத்தை, முதலிலே சிரித்தார். பிறகு, காந்தாவை இப்படிப்பட்டவள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அச்சம், மடம், நாணம், எதுவும் இல்லையே. இப்படி ஒரு அன்னியனுக்குக் கடிதம் எழுதலாமா? இதெல்லாம் சினிமா பார்ப்பதாலும், நாவல் வாசிப்பதாலும் வருகிற கேடுகள். இனி இவ்விதமாக நடக்க வேண்டாமென்று சொல்லு. தரித்திரம் பிடுங்கித்தின்கிறது, இந்த இலட்சணத்திலே துடுக்குத்தனமும் தாண்டவமாடுகிறது உன் அக்காவிடம்: காதலாம்! ஆசையாம்! எதற்காக ஆசை? பணம் இருக்கிறது என்னிடம், அதற்காகத்தானே இந்தப்பிளான்! அதற்கு வேறே ஆளைப்பார்க்கச்சொல்லு: நான் கலியாணம் செய்துகொள்வது என்று தீர்மானித்துவிட்டால், எங்கள் குடும்ப அந்தஸ்த்துக்கேற்ற பெண்கள் ஆயிரம் கிடைக்கும். நான் கலியாணமே செய்துகொள்ளப்போவதில்லை. அதிலும் இப்படிப்பட்ட வெட்கம்கெட்டவளைக் கண்ணெடுத்தும் பாரேன் என்று திட்டினார். நான் அழுதுவிட்டேன் அக்கா: ஏன் அந்தக்கடிதம் எழுதினாய்? என்று சாந்தா சோகத்துடன் கூறினாள். நான் என்ன செய்வது? மனம், அனலில் விழுந்தபுழுப்போல் துடித்தது. மிகக் கேவலமான காரியத்தையன்றோ செய்துவிட்டேன். சோமு என்னை ஏற்கமறுத்ததோடு, ஏளனம் செய்யவுமன்றோ இடங்கொடுத்துவிட்டேன். அவருடைய அந்தஸ்த்து என்ன! நான்யார்! அவர்மீது எனக்குக் காதல் ஏற்பட்டதென்றால், அவரது பணத்தைப்பெறுவதற்கே நான் பசப்புகிறேன்என்று அவர் கருதுகிறார். நான் செய்தது தவறு. கண்ணிழந்தவன் காட்சிக்குச் செல்வானேன்? காலிடறிவிழுவானேன்? செவிடனுக்குச் சங்கீதம் ஒரு கேடா?

என் கடிதத்தைக் கண்டு அவர் சிரித்தாராம்! எவ்வளவு ஏளனம், என் இருதயத்தில் இடம் பெற்று, என்னை வாட்டி வதைத்த எண்ணங்களை நான் அக்கடிதத்தில் எழுதினேன். அதைக்கண்டு அவர்சிரித்தாராம்! நீங்கள்சற்றுப் படியுங்கள் என் கடிதத்தை சிரிக்கவேண்டுமா, அழவேண்டுமா, கூறுங்கள். இதோ என் கடிதம், படியுங்கள், [தொடரும்]

"கண்ணம்மா" (9-ம் பக்கம் தொடர்ச்சி.)

"அன்பரே! தங்கள் வாக்குறுதியே என்முயற்சிக்கு ஊக்கமளித்து வெற்றியளிக்கும்" என்றாள் மடமயிலாள்.

'காதல்வழி கரடுமுரடானது' என்ற பழைய மொழி பொய்க்காமலிருக்க, தன்குமாரியை நகமன்னன் முழுமனத்துடன் விரும்புகிறானென்பதை எப்படியோ அறிந்துகொண்ட அழகப்பர் நெற்றியில் நர்த்தனமாடும் நாமம் கறுக்க, மீசை துடிக்க 'கண்ணம்மா, நீ இனிவெளியே செல்லக்கூடாது. வீட்டோடு அடைபட்டிரு உனக்கு வேண்டியவற்றை நான் வாங்கித்தருகிறேன்," என்று உறுமினார். சினங்கொண்ட சிங்கத்தின் முன்னே நில்லாது ஓடிஒளியும் எலியேபோல் தன்னறையில் துக்கம் நஞ்சென நெஞ்சடைக்கப் பதுங்கினாள் பதுமையினை யொத்தாள்.

தான் கற்ற கல்வியினுமினியாளைச் சில நாட்களாகக் காணாததால் ஊகித்தறிந்தான், உற்றதை மதியூகி, அவன்மனம் தடுமாறிற்று. வாழ்க்கையிலேயே வெறுப்புக்கொண்டவன் போலானான். உடனே தன் தந்தைக்குச் சிறுமுடங்கலொன்று எழுதி வைத்துவிட்டுச் சிறிது பணம் கையிலெடுத்துக்கொண்டு நகமன்னன் சென்னை நகரையடைந்தான். அவன் விட்டுப்போன முடங்கலில் "என்னைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதீர்கள், சிறிது காலங்கழித்து நானே திரும்பி வருகிறேன்" என்றே கண்டிருந்தது. நகமன்னன் திடீரென மறைந்ததையும், அவன் மறையக் காரணத்தையுமறிந்த நாயுடு காரு அவர்களும் அவர் மனைவி இராசம்மாளும் கொண்ட துயருக்கு, அளவேயில்லை. ஆயினும் அவன் 'அவளை' நேசித்த 'இந்துதர்மம்' என்ற வெட்டிச் சாக்கடைக்கு விரோதமென்று அவர்கள் முடிவு கொண்டதால் 'இந்துக்கள்' என்று பெருமையாகத் தங்களை நினைத்ததால், திராவிடர் கல்லூரித் தலைவரிடம் தங்கள் கதியீனத்தைக் குறித்து முறையிட்டனர். அழகப்பரோ "உன்னாலல்லவோ நகமன்னன் எங்கேயோ ஓடிவிட்டான்," என்று தன் புதல்வியைக் கடிந்து கொண்டார். எல்லாரைக்காட்டிலும் ஆழ்ந்த வருத்தமடைந்த கண்ணம்மா, "ஏ, பாழுஞ்சமூகமே, நீ என்னைச் சோதிக்கிறாயா," என்று ஆறாத்துயரில் மூழ்கினாள்; அவள் அலறலை அகற்றுவார் அங்கு ஆருமிலர்!

தெள்ளியதீந் தமிழ் நடையில் வியாசங்களும் கட்டுரைகளும், கதைகளும் எழுதும் திறமை படைத்த நகமன்னன் சென்னை வந்துசேர்ந்து ஒரு திங்கள் காலத்திற்குள் "எதிரொலி" என்ற நாள் தாளுக்குத் துணை ஆசிரியரானான். அவன் உழைப்பிற்கு ஏற்ற முறையில் ஊதியம் கொடுக்கப் படவில்லை யாயினும் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற முறையில் தமிழ்மக்களின் நல்வாழ்க்கைக் கேற்றவண்ணம் பத்திரிகையாகிய படகைச் செலுத்தி வந்தான்.

நகமன்னன் வேலையேற்றுத் திங்களொன்றாகவில்லை, சென்னைமாநில அரசியல் வானத்தில் இடியும் மின்னலும் தோன்றின. நாடெங்கணும் பரபரப்பு. திராவிடமக்களின் அரசியல் சமூகஇயலில் ஒப்பாரு மிக்காருமற்ற தலைவர், 'தென்னாட்டுத்தீரர், செழுந்தமிழர்' பெரியார் இராமசாமியார் அவர்களின் பாதம் தமிழ்வள நாட்டின் மூலைமுடுக்குக் களிலெல்லாம் பட்டது; அவருடைய வீராவேசமான பேச்சுத் தூங்கிக்கிடந்த தமிழனையும் தட்டி எழுப்பிற்று. நகமன்னன் 'எதிரொலி'யில் எழுதிய வாசகங்களெல்லாம் சோம்பேறித் தமிழனையும் அடிமைத் தமிழனையும் கூட

நாமிருக்கும் நாடு நமதென் பதறிந்தோம்—இது
நமக்கே யுரிமையாம் என்பதுணர்ந்தோம்" என்று

வீரத்துடன் சொல்லச்செய்தது. தமிழர் உணர்ச்சியற்றுப்போக அக்கிரகார மந்திரி சபையார் இந்திப்பாடையைக் கட்டாய பாடமாகப் பள்ளிகளில் நுழைத்தனர். "வேற்றுமொழி வேண்டவே வேண்டாம், இனிய தமிழ்வாழ்க! எமக்குத் தமிழே வேண்டும். இந்தி ஒழிக!!," என்று தமிழர் திரண்டெழுப்பிய சங்கநாதத்தில் தன்னுணர்வு இளைஞன் இருபத்து மூன்று அகவையே நிரம்பப்பெற்ற ஆண்டகை நகமன்னன் இரண்டறக்கலந்தான்.

அவன் தன்னலமிக்க எதிரிகளுக்கு 'எதிரொலி' மூலம் கொடுத்த சம்மட்டி அடிகள் துயரமே துணையாக்கொண்டிருந்த கண்ணம்மாவின் கவனத்தையும் கவர்ந்தது. "தமிழ் வீராங்கனைகளுடன் சிறைசெல்ல என் மனம் துணியமாட்டேனென்கிறதே," என்று ஏங்கிய வண்ணம் ஒரு வியாழக்கிழமை அன்று வந்த 'எதிரொலி' பத்திரிகையைத் தன்னறையில் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் காணப்பட்டதொரு செய்தியைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். அதுபின்வருமாறு:—

"நம் பத்திரிகையின் துணை ஆசிரியர் தோழர் நகமன்னன் ஆரிய ஆச்சாரி அமைச்சர் குழுவிற்குச் சாவுமணி அடித்தவண்ணம் இனிய தமிழுக்காக 'இந்துதியலாஜிகல்பள்ளி' முன்னிலையில் வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு மறியல் செய்யப்போகின்றார்." இச்செய்தியைக் கண்டதும் விரைவாகவே ஒருமுடிவிற்கு வந்தவளாகத்தோன்றினாள் கண்ணம்மா.

வெள்ளிக்கிழமை காலையில் திராவிடர் கல்லூரித் தலைவர் வீட்டில் ஒரே பரபரப்பு—ஏன்? முந்திய இரவே கண்ணம்மா தமிழர் விடுதலைப் போரில் பங்கெடுத்துக்கொள்ள ஏகினள் சென்னைக்கு! அவள் ஓர் சிறுமுடங்கல் விட்டுப்போயினாள். அதில், இந்திப்பாடை ஒழிக்கப்பட்ட மறுநாளே தன்னை நகமன்னனுக்கு மணம் முடித்துத்தர வேண்டுமென்றும், இல்லையேல் தற்கொலை புரிந்துகொள்வது நிச்சயமென்றும் எழுதப்பட்டிருந்தது. சனிக்கிழமை 'எதிரொலி'யின் முதற்பக்கத்தில், "நம்துணை ஆசிரியர் தோழர் நகமன்னனுக்கும், திராவிடர் கல்லூரித்தலைவருடைய திருச்செல்வி கண்ணம்மா அவர்களுக்கும் தலா ஆறுமாதச்சிறைவாழ்வை நீதிபதியவர்கள் விதித்துள்ளார்கள். சிறை வாயலில் அவர்களிருவரும் இந்திப்பேய் விரட்டப்பட்டபின்னர்தான் தங்கள் திருமணத்தை நடத்திக்கொள்வதாக ஓர் சபதம் செய்து கொண்டார்கள். செல்வனும் செல்வியும் வாழ்க" என்றிருந்த செய்தியைக் கண்டார் அழகப்பக்கவுண்டர்!

இச்செய்தியையும் தன்மகளின் முடங்கலையும் எடுத்துக்கொண்டு அழகப்பர் வழக்கறிஞர் அரங்கசாமிநாயுடு வினில்லத்திற்கு ஓடினார். முன்னமோர் முறை அதாவது நகமன்னன் சென்னைக்குச் சென்ற வமயம் நகமன்னனின் தந்தை தன்னில்லத்தைநோக்கி ஓடிவந்ததை மறந்துவிட்டார் மதச்சுழலில் மடமையை அணிகலனாகக்கொண்டவர். சிலநாட்கள் தீவிரமாக ஆலோசித்தபின், "சாதி ஏதய்யா! சாற்றுங்கால் தமிழர் ஒன்றய்யா!" என்றும், "ஒத்தகுணமும், ஒத்த கல்வியும் உடைய நகமன்னனும் கண்ணம்மாவும் மகிழ்ச்சிநலனுடன் வாழ்ந்தால் அதுவே நமக்கு ஒரு பெரிய செல்வம்" என்றும் அறிவின்பாற்பட்ட முடிபுகளுக்கு வந்தனர் மன்னனை ஈன்றாரும் கண்ணினை ஈன்றாரும்.

இதற்கிடையில் நகமன்னன் கண்ணம்மா சிறைவாழ்க்கை ஐந்து திங்களாவதற்குள் 'தன்னலக்காரராட்சி தளர்ந்து மாண்டது; அவர்களோடு இந்தியும் ஒழிந்தது. இக்கதைத்தலைவனும் தலைவியும், மற்றும் இந்தி எதிர்ப்புப்போரில் சிறையிலடைக்கப்பட்ட தோழர்களும் சிறாரும் விடுதலையடைந்தனர்.

கன்னித்தமிழ் மணங்கமழ, ஆண்மைத்தமிழும் அழுகுத்தமிழரும் ஒன்றியனபோல தன்னுணர்வு இயக்கத்தந்தையார் தோழர், ஈ. வெ. ரா. முன்னிலையில் நகமன்னனும் 'கண்ணம்மாவும் மண ஒப்பந்தம் செய்துகொண்டனர், ஈராண்டுகளுக்குமுன்னர், பங்குனித்திங்களில் ஓர் நாள்! "வாழிய செந்தமிழ்!" "திராவிடநாடு திராவிடர்க்கே!!"

வானம்பாடி வெளியீடுகள்.

பாரதிதாசன் இயற்றிய
எதிர்பாராத முத்தம் 0—8—0.

ஈழத்தடிகள் எழுதிய
பெரிய புராண ஆராய்ச்சி

முதல் பாகம் 0—6—0.
2-ம் „ 0—?—6.
3-ம் „ 0—3—0.

மேற்படி புத்தகங்கள் எம்மிடம் கிடைக்கும்.
தபாற் சிலவு வேறு.

வானம்பாடி நூற்பதிப்புக் கழகம்.
51. நிமந்தக்காரத் தெரு,
சின்னக் காஞ்சீபுரம்.

பாரதிதாசன்
இயற்றிய
புரட்சிக்கவி.

*

கற்பனையும், கவிதாலங்காரமும், புரட்சிக் கருத்துகளும், பொங்கும் காதலும், பொலிவுற விளங்கும் இந்த தேன்மொழி ஏடு, உங்களைக் களிப்புக்கடலில் தள்ளும்!

*

அமுதவல்லியின் அழகொளி, உதாரனின் காதல், அரசனின் ஆர்ப்பரிப்பு, கொலைகளக் காட்சி, குடியரசு அமைப்பு எனப் பலப்பல கட்டங்கள் இதில் உள்ளன. 0—2—6 அணு ஸ்டாம்பு அனுப்பினால் 1-பிரதி அனுப்பப்பெறும். கைவசமிருக்கும் காபிகள் மிகமிகக்குறைவு. ;உடனே தேவைக்கு எழுதுக.

*

திராவிடநாடு நிலையம்.
சின்ன காஞ்சிபுரம்.

சென்னை தாசில்தார் எழுதுவது
(நான் நேரில்கண்ட உண்மை)

எனது நண்பர் 60-வயதுடைய ருத்திரபிள்ளைக்கு அடிவயற்றினுள் ஒருபக்கம் பெரிய விளாங்காயளவு வீக்கமும், வலியும், காய்ச்சலுங்கண்டு இரவுபகல் தூக்கமில்லாமல் வருந்தினார் அதைப்பார்த்த டாக்டர்கள் இது குடற்கிளை நோய் (அப்பெண்டிசிட்டிஸ்) உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப்போய் 24 மணிநேரத்திற்குள் வயிற்றை அறுத்து வைத்தியம் செய்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் செத்துப்போவாய் என்று சொல்லிவிட்டார்கள். பின்னர் நான் அவரை பண்டித எஸ். எஸ். ஆனந்தம்அவர்களிடம் கொண்டுபோனேன் பண்டிதர் அறுக்காமலே 10 நாளைக்குள் நோய், வீக்கம், காய்ச்சல் முதலியவைகளைப்போக்கி அவரைக் காப்பாற்றினார். மேலும் பண்டித ஆனந்தம் அவர்கள் ஏழைகளிடத்தில் சிறிதும் கைம்மாறு கருதாமல் இத்தகைய கொடுமையான நோய்களைக் கவனித்து உயர்ந்த மருந்து கொடுத்து உதவிசெய்து வருகின்றார் என்பதைப் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன்.

(ஒம்) **கிருஷ்ணசாமி,**
சென்னை தாசில்தார்,
நாராயண விலாஸ் ராமேசம்தெரு,
தியாகராயநகர் சென்னை.

தற்கால விலாசம்,
செயலாளர்.
பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
தமிழ் மருத்துவக்கூடம்,
148, நடுத்தெரு சேக்குப்பேட்டை, காஞ்சிபுரம்.

Rangoon Eveready Electric Diamonds.

ரங்கூன்
எவரெடி எலெக்ட்ரிக் வைரங்கள்.

நம்பிக்கையும் நாணயமும் நல்லபிரகாசமும் உள்ளது.

நம் நாட்டு சிறந்த கைத் தொழிலை ஆதரியுங்கள்.

பர்மாவில் தேர்ச்சிபெற்ற சிறந்த வைரத்தொழிலாளரைக்கொண்டு முதல்தரமான செயற்கை ரங்கூன் கமலங்கள் தயார் செய்கிறோம். தயவு செய்து ஒருதடவை தங்கள் ஆர்டரை அனுப்புங்கள்.

Sole Agent,	சோல் ஏஜண்ட்,
S RAMASAMY,	**S. இராமசாமி**
Rangoon Electric Eveready Diamonds.	ரங்கூன் எவரெடி எலெக்ட்ரிக் வைரங்கள்.
Thiruvanaikoil P. O.	திருவானக்காவல் P. O,
TRICHINOFOLY.	திருச்சினுப்பள்ளி.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51 Nimanthakara Street, L. Conjeeveram.